கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(19.05.2019 - 19 வைகாசி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 208, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

ஞான ஒளி
ඥාන ඔළි
GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05


**பங்குதந்தையர்களுக்கும், பங்கு மக்களுக்கும் பேராயரின் செய்தி**

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# பூமியில் சிந்தப்பட்ட இரத்தம் இறைவனை நோக்கி கூக்குரலிடுகிறது

# அசம்பாவிதங்களை நடாத்தியவர்களுக்கு இறைவனின் தீர்ப்பிலிருந்து தண்டனை நிச்சயம்



**கடந்த மாதம் 21ம் திகதி நடந்த மனித வெடிகுண்டு தாக்குதலினால் உயிரிழந்தவர்கள், காயப்பட்டவர்களின் உறவினர்களுடனான இரங்கல் திருப்பலி இம்மாதம் 9ம் மற்றும் 11ம் திகதிகளில் நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி ஆலயத்திலும், கொழும்பு புனித லூசியாள் பேராலயத்திலும் நடைபெற்றபோது அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் வழங்கப்பட்ட மறையுரை.**

கடந்த சித்திரை மாதம் 21ம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை பேராலயத்தில் இரவு பாஸ்கா திருவிழா திருப்பலி முடிந்து, ஆயர் இல்லத்திற்குச் சென்று அன்று காலை எனது தனிப்பட்ட திருப்பலி முடிந்த பின்பு, 8.50 மணியளவில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் அருட்தந்தை ஜுட்ராஜ் அடிகளார் தொலைபேசி அழைப்பில் என்னோடு தொடர்புகொண்டு காலை 8.45 மணியளவில், திருத்தலத்தில் குண்டு வெடித்துள்ளது உடனடியாக வருமாறு கூறினார். எனக்கு இடி விழுந்தது போல் இருந்தது. உடனடியாக அங்கு விரைந்தேன். ஆனால் ஆலயத்திற்குள் என்னை பாதுகாப்பு படையினர் அனுமதிக்கவில்லை. ஆலயத்தில் இன்னுமொரு குண்டு இருப்பதாக கூறி என்னை வாகனத்தில் ஏற்றி ஆயர் இல்லத்திற்கே அனுப்பினர். இடைவழியில் செல்லும்போது இன்னுமொரு தொலைபேசி அழைப்பு, நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்தில் குண்டு வெடித்து பலர் இறந்துள்ளனர் என்று கூறினர்.

மனிதர்களாகிய எம்மால் இந்நிகழ்வை தாங்கிக்கொள்ள முடியாது. ஆனால் விசுவாசத்தினால் மாத்திரமே முடியும். இறந்தவர்களும், காயப்பட்டவர்களும் இறைவனில் இருந்த நிலையான வல்லமை பற்றிய பெரியதொரு...

தொடர்ச்சி 02ம் பக்கம்..

## வெசாக் தினத்தையொட்டி திருப்பீட பல்சமய உரையாடல் அவையின் செய்தி



**பெண்களின் மாண்பு பாதுகாக்கப்பட வேண்டும். புத்தமதத்தினரும், கிறிஸ்தவர்களும் இணைந்து செயல்படுங்கள்.**

வெசாக் விழாவை முன்னிட்டு புத்த மதத்தினரும், கிறிஸ்தவர்களும், பெண்கள் மற்றும் சிறுமியர்களின் மாண்பையும், சம உரிமைகளையும் ஊக்குவிக்க வேண்டும். அதுபோல் அவர்களின் மாண்பு எல்லா விதத்திலும், அக்கறையுடன் பாதுகாக்கப்படவேண்டும். பெண்களும், ஆண்களும் மாண்பில் சமமானவர்கள் என்று போதிக்க இரண்டு மதங்களும் பெண்களுக்காக சிறப்பாக பங்காற்றி வருகிறது..

தொடர்ச்சி 15ம் பக்கம்..




## இலங்கை குறித்து திருத்தந்தையின் மீளாத் துயரம்

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் தேவாலயங்களிலும், ஹோட்டல்களிலும் இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து திருத்தந்தை ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார். பிரார்த்தனைக்காகக் கூடியிருந்தவேளை காயமடைந்தவர்கள் மற்றும் கொடூரமான வன்முறைகளால்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## குருத்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வு – 01.06.2019.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் புதிய குருக்களை திருநிலைப்படுத்தும் திருப்பலி 01.06.2019 அன்று சனிக்கிழமை கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் காலை 9.00 மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு.



மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறுகிறது.

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அறிக்கை

இலங்கை ஆயர்கள் அனைவரும் பங்கேற்ற ஆயர் பேரவையானது இம்மாதம் மாதம் 7ம் திகதி தொடக்கம் 9ம் திகதி வரை நடைபெற்றது. இப்பேரவைக் கூட்டத்தில் 250இற்கும் மேற்பட்ட உயிர்களைக் காவுகொண்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று மூன்று வாரத்தின் பின்னரான நாட்டின் சமகால நிலை பற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டது.

சிலுவையில் தமது எதிரிகளையே மன்னித்த இயேசுவின் மிகச் சிறந்த முன்மாதிரிகையைப் பின்பற்றி இம்மிருகத்தனமான தாக்குதலுக்கு இலக்கான நிலையில் இறைமக்கள் நடந்துகொண்ட முறையை எல்லா ஆயர்களும் மீண்டும் பாராட்டி நிற்கின்றனர். ஒரு நாட்டின் மக்கள் என்ற முறையில் நாம் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளவேண்டும். மற்றும் ஒவ்வோர் மதத்தின் தனித்துவத்தையும் மதிக்கவேண்டும். மதத்தின் பெயரில் வன்முறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் தத்தம் மதங்களை மதிக்கிறோம். எச்சூழ்நிலையிலும் இலங்கைத் தீவில் மத நல்லிணக்கமும் அமைதியுடனான சக வாழ்விற்கான சூழ்நிலையும் என்றும் பாதுகாக்கப்படவேண்டும்.

எதிர்பாராத இப்பேரிழப்பிற்கு பாதுகாப்பு நிலைமையில் தென்பட்ட பாரிய தொய்வு நிலையே காரணம் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. பல உயிர்களைக் காவு கொள்ளக் காரணமாயிருந்த இக்கொடூரத் தாக்குதலின் சூத்திரதாரிகளை விரைவில் இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதேவேளை பாரபட்சமற்ற விசாரணையினூடாக தீவிரவாத சிந்தனைப் போக்குடன் இத்தாக்குதலுக்கு மூலகாரணமான குற்றவாளிகளை உடன் சட்டத்தின் முன் நிறுத்துமாறு இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை அரசாங்கத்திடம் பெரிதும் எதிர்பார்த்துள்ளது.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்த பாதுகாப்பு படையினரதும், பொலிஸாரினதும் அர்ப்பணமுள்ள பணியை நாம் பாராட்டுகின்றோம். இவ் முயற்சியானது மக்கள் மத்தியில் சுமூக நிலை ஏற்படும் மட்டும் தொடரப்படவேண்டும். மக்களின்...

15

**மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS, தலைவர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**

**மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ், பிரதம செயலாளர் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**

**என் கடவுளே உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன். (தி.பா 145)**

# என் மீது அரசியல் பொறுப்புக்களை சுமத்துவது தகுதியாக இருக்கும் என்று சிலர் முன்வைக்கும் கருத்துக்கள் என்னை ஆச்சரியப்படுத்துவதுடன் கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.



## கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தமது அறிக்கையில்...

இந்த நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையினால் என்மீது அரசியல் பொறுப்புக்களை சுமத்துவது தகுதியாக இருக்கும் என்று சிலர் முன்வைக்கும் கருத்துக்கள் என்னை ஆச்சரியப்படுத்துவதுடன் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. நான் கத்தோலிக்க திருச்சபையின் ஒரு குரு மற்றும் ஆண்டகையாக எனது ஆன்மீக மற்றும் மத நடவடிக்கைகளை மட்டும் முன்னெடுத்து வருகின்றேன். நான் இந்த நாட்டையும், மக்களையும், எமது கலாசாரத்தையும் மிக அதிகமாக நேசிக்கின்றேன். இவற்றைப் பாதுகாப்பதற்காக ஆன்மீக ரீதியாக என்னால் செய்ய முடியுமான எல்லாக் காரியங்களையும் அர்ப்பணிப்புடன் செயற்படுத்துவேனே தவிர, வேறு எந்த எதிர்பார்ப்புக்களும் இல்லை என்பதை உறுதிப்பட கூறுகின்றேன். கொழும்பு பேராயரின் ஊடக செய்தியில் குறிப்பிட்டார்.

என்னுடைய ஒரேயொரு அரசியலானது இறைவன் மற்றும் நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதாகும். அதற்காக அரசியல் கோட்பாடுகளை அதனூடாக முன்னிறுத்துவதோ, எந்தவொரு கட்சிக்கும் ஆதரவு வழங்குவதோ, அரசியல் பதவிக்காக முன்வருவதோ எந்த வகையிலும் எனது நோக்கமல்ல என்பதை அறிவிக்க விரும்புகிறேன். என்மீது நம்பிக்கை வைத்து சில தரப்பினர் முன்வைத்த கருத்துக்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன். அது அந்த இடத்திலேயே நின்றுவிடும் என்று எதிர்பார்க்கின்றேன்.

## பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களை சந்தித்த கர்தினால்



அதமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கருத்துத் தெரிவிக்கையில்... கத்தோலிக்க ஆலயங்களை தாக்கி மனித கொலைகள் நடந்த பின்பும் எமது கத்தோலிக்கர் அமைதியாக முப்படைகளுக்கும், பொலிசாருக்கும் வழங்கிய ஒத்துழைப்புக்காகவும் அவர்களின் கடமையை சரியாக செய்ய உதவியவர்களுக்காகவும் பேராயர் என்ற வகையில் எனது கௌரவத்தையும் நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

எமது மற்ற சகோதர இன மக்களிடமும் அதாவது பௌத்த, இந்து, முஸ்லிம் மக்களிடமும் கலவரப்படாமல் தொடர்ந்தும் சமாதானத்தை நிலைநாட்ட பாதுகாப்பு பிரிவினருக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். பலவிதமான தாக்குதல்களில் ஈடுபட்டு எமது உணர்வுகளைத் தூண்டி, நாடு முழுவதும் மதக்கலவரங்களை உருவாக்கி அராஜாங்கம் செய்யமுனைகின்றனர். நாம் கலங்கி, உணர்வுகளுக்கு அடிபணியாது சிந்தித்து செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். முழு நாடும் அபாயமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் இக்கணம் நம்பிக்கை இழந்திருக்கும் காலத்தில் வாள் எடுத்தவன் வாளால் அழிவான் என்பதற்கேற்ப வைராக்கியத்திற்கு வைராக்கியம் அமைதியின்மையை ஏற்படுத்தும். நாம் சமாதானத்துடன் வாழும் சூழலை உருவாக்க வேண்டுமென எதிர்பார்க்கிறேன். ஒருசிலரின் எதிர்பார்ப்பு, நாட்டில் பெரியதொரு கலவரமான சூழலை ஏற்படுத்தி, ஒருவர் ஒருவரை வெட்டி வீழ்த்தி இரத்த ஆறு ஓடச் செய்து அவர்களது அரசியல் கொள்கையை நிறைவேற்ற முனைகின்றனர். அவர்களின் திட்டங்களை நிறைவேற வழியமைக்காமல் பொறுமையாக செயல்பட்டு மக்களின் உயிர், உடைமைகள் அழிவுறாமல் பாதுகாக்கவும் மறைந்திருந்து செயல்படுபவர்கள் யார் என இனம்கண்டு அவர்களை வெளிக்கொண்டுவர உதவிபுரிய வேண்டும். தவறுவோமாயின் பெரும் அழிவுகளைச் சந்திக்க நேரிடும். கிறிஸ்தவர்கள் இறைவனை நெருங்கி செயல்பட்டு அவர் தந்த மறையில்வாழ்ந்து எமது முன்னோர்கள் செயல்பட்ட விதத்தில் எமது விசுவாசத்தையும்கௌரவத்தையும்பாது காத்து தமது வீடுகளிலிருந்து நாட்டின் சமாதானத்தை பாதுகாக்குமாறும் இறைவனை மன்றாடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் தேவதாயாருக்கு ஒவ்வொரு நாளும் குடும்பமாக செபமாலை செபிக்குமாறு விஷேசமாக கேட்டுக்கொள்கிறேன். நேற்று நீர்கொழும்பில் நடந்த கலவரம் ஒரு உதாரணமாகும். அக்கலவரத்தை ஏற்படுத்தியவர்கள் எமது இடங்களில் இருப்பவர்கள் அல்ல. வெளியிலிருந்து வந்து குழப்பத்தை ஏற்படுத்தியதாக அறிகிறோம். ஒரு சிலருக்கு மதுபோதையை கொடுத்து அவர்கள் மூலம் முஸ்லிம் கிறிஸ்தவர்களிடையே பிரச்சனையை ஏற்படுத்த முயன்றனர். இதற்கு இடமளிக்காமல் சிந்தித்து செயல்படவேண்டும். முஸ்லிம் மக்களுக்கு எதிராக கையோங்க வேண்டாம். மனித குண்டு தாக்குதலின் பின்னணியில் முஸ்லிம் மக்கள் இல்லை என்பதை தெளிவாக கூறுகிறேன். தமது அரசியல் இலாபத்தை அடைய வெளிநாட்டு சக்திகளினால் பிழையான வழியில் வழிநடத்தப்பட்டு, ஒரு சில இலங்கை இளைஞர்களாலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த பிரதேசத்தில் இருக்கும் மதுபான வியாபார கடைகளை மூடுமாறு அரசிடம் கேட்டுக்கொள்கிறேன். மதுபானம் வெறி மிருகத்தைவிட தாழ்ந்த நிலைக்கு ஒருவரை தள்ளுகிறது. அதேபோல் சமூக வலைதளத்தில் ஒருவர் ஒருவருக்கு பிழையான விதத்தில் தகவல்களை வழங்க வேண்டாம். நான் ஊடகங்களில் செய்திகளை வெளியிடுவதற்கு...

தொடர்ச்சி 13ம் பக்கம்..

## 01 பூமியில் சிந்தப்பட்ட...

விசுவாசத்தினாலேயே திருவிழா திருப்பலியில் கலந்துக்கொண்டனர். தமக்கு இவ்வாறு நடக்கும் என எதிர்பார்க்கவில்லை. அவர்கள் வாழ்வு இழக்கப்பட்டது இறைவனின் விருப்பப்படி அல்ல. மனித வெடிகுண்டு தாக்குதலுக்கு உட்படுத்தியவர்களின் பாவசுமையே எம்மவர்கள் பலியாகக் காரணமாகியது. இதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆயர் என்ற வகையில் பல கேள்விகள் எனக்குள் ஏற்பட்டது. ஏன் எமக்கு இவ்வாறு செய்தார்கள்? சந்தோசமாக இருந்த மக்களின் உயிர்களை கொடூரமாக ஏன் பறித்தார்கள்? பலியான அனைத்து உயிர்களும் இறைவனின் திட்டத்தின்படி உயர்ந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்ட உயிர்களாகும். ஏன் இவ்வாறு நடந்தது? பாஸ்கா திருவிழாவில் இறைவனின் ஆசீ பெற வந்த எமது சகோதர சகோதரிகளுக்கு ஏன் இப்படி நடந்நதது? இக்கேள்விகளுக்கான விடையைத் தர மிகவும் கஷ்டமாகும். நாம் ஒருவரை ஒருவர் தேற்றிக்கொள்ள மாத்திரமே முடியும். எமது மக்களை கொன்று, அழித்து, உடைத்து, படுகாயமடையச் செய்தனர். எமது குடும்பங்களை நிலைகுலையச் செய்தனர். தமது குடும்ப அங்கத்தவர்களை இழந்த கணவன், மனைவி, பிள்ளைகளுக்கு எந்தளவுக்கு வேதனை உள்ளது என்பதை என்னால் உணர முடிகிறது. தனிப்பட்ட முறையில் இது எனக்கு விழுந்த அடியாகும். இந்த வேதனையால் நான் இன்னும் துன்புறுகிறேன். இவ்வாறு நடக்காமல் தடுத்திருக்கலாமே என தோன்றுகிறது. போதும்...!

அவர்களின் தனிமையைத் தாங்கிக்கொள்ள கஷ்டாக உள்ளது. சந்தோசம் துன்பமாக மாறியது. தமது குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்களுக்கு எனது இதயத்தால் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுக்கு ஏற்பட்ட வேதனை எனக்கு ஏற்பட்ட வேதனையாகும். இந்த தாக்குதலை அறிந்திருந்தும் தடுக்காமல் விட்டவர்கள், தலைவர்கள், பொறுப்பதிகாரிகள் மறைமுகமாக உதவி புரிந்தவர்கள் அனைவரும் பொறுப்பு கூற வேண்டும். அவர்களை இனம் கண்டு அதிகாரத்திலிருந்து நீக்குவதன் மூலம் தண்டிக்கப்பட வேண்டும். பொறுப்பை சரியாக செய்ய முடியாதவர்கள் தலைமைத்துவத்திற்கு தகுதியற்றவர்கள். அவர்களை அகற்ற வேண்டும். ஆணைக்குழுவினால் இன்றுவரை சரியாக எதையும்செய்ய முடியவில்லை. எதுவும் தெரியாத புனிதர்களைப்போல் நடிக்கிறார்கள். அவர்கள் தப்ப முடியும் என நினைக்கிறார்கள்.

'மனிதர்களிடமிருந்து தீர்ப்பும் தண்டனையும் கிடைக்கவில்லை என்றாலும் இறைவனின் தீர்ப்பிலிருந்து தண்டனை கிடைக்கும். உயிர்களை இழந்த பெற்றோர் பிள்ளைகள் அனுபவிக்கும் வேதனைகளை நீங்களும் அனுபவிக்கும் காலம் வரும்' நடைபெற்ற அசம்பாவிதங்களைப் பயன்படுத்தி நாடு முழுவதும் குழப்பத்தை ஏற்படுத்துபவர்கள், குழப்பத்தை ஏற்படுத்த உதவி புரிபவர்கள், அரசியல் இலாபம் அடையமுனைபவர்கள், குண்டுதாரிகள் பிழையான வழிகளைப் பின்பற்றி, மதத்திற்காக மக்களை எதிரிகளாக்கி, தமது மறையுரைகளில் தீவிரவாத கருத்துக்களைப் பரப்பி, இளம் தலைமுறையினரின் உணர்வுகளைத் தூண்டி ஆயுதங்கள் கையில் எடுக்க தூண்டியவர்கள் அனைவரும் பொறுப்பு கூற வேண்டும். அவர்களுக்கு மனிதரிடமிருந்து நீதியான தீர்ப்பு கிடைக்கவில்லையென்றாலும் இறைவனின் நீதியான தீர்ப்பு கிடைக்கும்; இறைவனின் தண்டனை கிடைக்கும். பூமியில் சிந்தப்பட்ட இரத்தம் இறைவனை நோக்கி கூக்குரலிடுகிறது. இவர்களுக்கு இறைவனின் நீதியான தீர்ப்பு வழங்கப்படும் என்பது உறுதி.

உங்களிடமுள்ள அன்பினாலேயே கதைக்கிறேன். நான் உங்கள் ஆயன். நீங்கள் எனக்குரியவர்கள். நான் உங்களுக்கு சொந்தம். நான் உங்களுக்காக வாழ்கிறேன். அஞ்சாதீர்கள்! இறைவனை நான் விசுவசிக்கிறேன். அவரில் உள்ள ஆழமான விசுவாசத்தினால் கூறுகிறேன். இறைவன் உங்களுடன் இருந்து இந்த வேதனைகளைத் தாங்கிக்கொள்ள உதவிபுரிவார்.

கிறிஸ்துவுக்குள் வாழும்போது ஒவ்வொரு அம்மா, அப்பா, சகோதர சகோதரிகளும் எமது சகோதரர்களாகும். அதனால் நீங்கள் ஒவ்வொருவரும் எனது சகோதர,சகோதரிகள் எனது அம்மா அப்பா. பங்குகளின் எமது சொத்துக்கள். நாம் எந்நேரமும் உங்களுடன் இருந்து உங்கள் துக்கத்தில் பங்கெடுக்கிறோம். பயப்படாது விசுவாசத்தில் இருப்போம். அனர்த்தத்திற்கு உள்ளாக்கியவர்களில் வைராக்கியம் கொள்ளாது அவர்களை மன்னிப்போம். இயேசு தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்து செபித்த, அவரின் வழிகாட்டுதலுடன் வாழும் நாமும் அவர்களை மன்னிப்போம். எம்மை மகிழ்ச்சியுடன் வாழ விடுமாறு கூறுவோம். அன்பு, கருணை, இரக்கம், ஒருவர் ஒருவரை புரிந்துகொள்ளல், வாழ்வில் இருக்கும் ஆழமான அர்த்தம், இறைவனின் விருப்பப்படி வாழ்ந்த ஒருவர் ஒருவருக்காக உதவிபுரிந்து வாழ்தலே ஒழிய மற்றவரின் வாழ்வை அழிப்பது கிறிஸ்தவர்களாகிய எமது செயலல்ல. நாம் நீதிகேட்டு செல்லவேண்டியது இறைவனின் நீதிமன்றத்திற்கே. காயின் ஆபேலை கொலை செய்தபோது ஆபேலின் இரத்தம் பூமியில் சிந்தப்பட்டு இறைவனை நோக்கி கூக்குரலிட்டது. எமது தேவாலயங்களில் சிந்தப்பட்டவர்களின் இரத்தத்திற்கு கணக்கு கொடுக்க வேண்டும். அதற்குரிய தீர்ப்பு இறைவனால் வழங்கப்பட இடமளிப்போம். அற்புதங்கள் புரியும் புனித அந்தோனியார், புனித செபஸ்தியரின் நடுநிலையோடு நியாயம் கிடைக்கட்டும். நாம் தீர்ப்பிடத் தேவையில்லை. என்னையும் அச்சுருத்தியிருக்கிறார்கள். நான் பயப்படமாட்டேன். எனது வாழ்வு உங்களுக்கு, இறைவனுக்கு சொந்தம். எந்நேரம் என்றாலும் பலியாக நான் தயாராக இருக்கிறேன். உங்களுடன் இந்த பயணத்தில் தொடர்ந்துசெல்ல தயாராகவே இருக்கிறேன்.

புனித. அந்தோனியார் திருத்தலத்தின் திருப்பலியின் விசுவாச அறிக்கையின் போதும், புனித. செபஸ்தியார் தேவாலய திருப்பலி முடிவுறும் போதுமே இவ்வனர்த்தம் நிகழ்ந்தது. அவர்கள் இயேசுவில் ஞானஸ்நானம் புதுப்பிக்கப்பட்டு, அவரின் திருச்சரீரத்தினால் போஷிக்கப்பட்டும் உள்ளனர். மறைசாட்சிகளாக மரித்த 65 பேரும் சொர்க்கத்தில் புனிதர்களாக உள்ளனர். விசேசமாக கட்டுவாப்பிட்டி கிராமம் மறைசாட்சிகளின் கிராமமாக மாறியுள்ளது. சில தினங்களுக்கு முன் நான், 'ஆலயங்களைக் கட்டுவதைவிட புனிதர்களாக மாறுவோம்' என்று கூறினேன். இறந்தாலும் நாம் கத்தோலிக்கர்கள். நாம் இறைவனின் மக்கள். எம்மைவிட்டு பிரிந்து சென்றவர்களிடம் அவர்களுக்காக மன்றாடாமல், எமக்காக இறைவனிடம் மன்றாடுமாறு வேண்டுவோம்.

கொழும்பு உயர் மறைமாவட்டம் பேராயர் என்ற ரீதியில் நாம் உங்களுடன் எந்நேரமும் இருக்கிறோம். 'என் இறை விசுவாசத்தில் காலையும் மாலையும் எனது செபத்தில் உங்களுக்காக செபிக்கிறேன்' உங்கள் ஆயராக நான் உங்களிடம் வேண்டுவதெல்லாம் 'எழுந்திருங்கள் மீண்டும் எழுந்து தொடர்ந்து பயணிப்போம்; முன்னேறுங்கள், இறைவனில் விசுவாசங்கொண்டவர்களாக வல்லமையைப் பெற்று முன்னேறுவோம்' எம்மைவிட்டு பிரிந்து சென்ற எமது குடும்ப அங்கத்தவர்கள் எம்மிடம் எதிர்பார்ப்பது இதைத்தான். இறுதி காலங்களில் நாமும் அவர்களுடன் இணைந்துக்கொள்வோம். அதுவரை அவர்களுக்காக தான தர்மங்கள் செய்து எழுந்து முன்னேறுவோம்.

எனது அனைத்து செபங்களின் போதும் செபமாலை நேரத்திலும் உங்கள் அனைவருக்காகவும் மன்றாடுகிறேன். இறுதியில் குண்டுத் தாக்குதலினால் காயப்பட்டவர்களுக்கு, உயிரழந்தவர்களின் உறவினர்களுக்கு, இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டது.

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔළි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
19 வைகாசி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# நாம் அனைவரும் மாண்புமிக்க மனிதர்கள் என்பதை உணர்ந்தவர்களாக செயல்படவேண்டும்.

எமது நாடு தற்போது அசாதாரணமான ஒரு சூழலை எதிர்கொண்டுள்ளது. நடைபெற்று வரும் பயங்கரவாத தாக்குதல்களால் மக்கள் மிகவும் அச்சத்துடன் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை நாம் அறிவோம். நாட்டில் நிலவிவரும் பாதுகாப்பு அச்சுறுத்தலான நிலையில் பயங்கரவாதமற்ற தேசத்தை கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இன, மத, மொழி கடந்து நாம் அனைவரும் மாண்புமிக்க மனிதர்கள் என்பதை உணர்ந்தவர்களாக செயல்படவேண்டும். எமது உயிரை அழிப்பதற்கே எமக்கு உரிமையில்லாதபோது பிறிதொருவரின் உயிரை எப்படி எடுக்கமுடியும் என்பதை சிந்திக்கவேண்டும். ஏனையவரின் வலிகளைப் புரிந்து நடந்துகொள்ளவேண்டும். கடந்த கால கசப்புக்களை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள இடமளிக்கவேண்டாம். நாட்டில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் நீங்க தினமும் அன்னை மரியிடம் வேண்டுவோம். இம்மாதம் மாதாவின் வணக்க மாதமாகையால் ஒரு காரணிக்கத்தை எம் நாட்டிற்காக ஒப்புக்கொடுக்க வேண்டுமென உங்கள் அனைவரிடமும் கேட்டுநிற்கின்றேன். அத்தோடு உங்களது செபங்களில் வெடிகுண்டுத் தாக்குதலில் காயப்பட்ட, மற்றும் உறவுகளை இழந்து ஆழாத் துயரில் வாழும் மக்களையும் நினைவுகூரும்படி கேட்டுநிற்கின்றேன். பாதிக்கபட்டவர்கள் மனத்திடத்திடனும் விசுவாசத்திடனும் வாழ்க்கையை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

**"நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்துக்கொண்டேன்"** (யோவா.15:16) என்ற இயேசுவின் கூற்றுக்கிணங்க எமது மறைமாவட்டத்தில் ஆனிமாதம் 01ம் திகதி குருத்துவம் எனும் அருளயடையாளத்தைப் பெற்று, குருத்துவப்பணியை 10 பேர் ஆரம்பிக்கவிருக்கின்றார்கள். எல்லா அழைத்தல்களிலும் முதல் படி எடுத்து வைப்பவர் இறைவன்தான். குருத்துவ வாழ்வில் அடியெடுத்து வைக்கும் உங்கள் அனைவருடனும் இறைவனின் ஆசீரும் அன்னை மரியாளின் பாதுகாப்பும் நிலைத்திருக்கட்டும். குருத்துவப்பயணம் இனிதே தொடர்ந்திட ஞான ஒளி சார்பாக உங்கள் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன். மேலும் குருத்துவ வாழ்வில் அடியெடுத்து வைக்கும் இவர்களுக்காகவும் செபிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். அத்தோடு **"அறுவடையே மிகுதி வேலையாள்களோ குறைவு, ஆகையால் தமது அறுவடைக்கு தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளர்களிடம் மன்றாடுங்கள்"** (லூக் 10:2) என்பதற்கேற்ப உங்களது குடும்பங்களில் இறையழைத்தலைப் பற்றி உங்கள் பிள்ளைகளுக்கு எடுத்துகூறுங்கள். இறைவனின் அழைப்பை பிள்ளைகளும் பெற்றுக்கொள்ள வழியமைத்துக் கொடுங்கள்.

மேலும் இம்மாதம் 18,19ஆம் திகதிகளில் கௌதம புத்தரின் பிறப்பு, ஞானமடைதல் மற்றும் இறப்பை நினைவு கூரும் புத்த பூர்ணிமா என்றழைக்கப்படும் வெசாக் திருநாளை முன்னிட்டு உலகின் புத்த மதத்தினர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். வெசாக் பண்டிகையானது அமைதியினதும், ஒளியினதும் நிகழ்வு. இந்த பண்டிகை அனைவர்க்கும் அமைதியை கொண்டுவருவதாக.

இறையாசீருடன் ஆசிரியர்

கன்னி மரியாவின் செபமாலை திருச்சபையால் ஊக்குவிக்கப்பட்டு எண்ணற்றப் புனிதர்களால் நேசிக்கப்பட்ட செபம். எளிமை ஆனால் ஆழம் நிறைந்தது. விலை மதிப்பில்லாதது. நற்செய்தியின் ஆழத்தை முழுமையாக உள்ளடக்கிய சாரம். என் விருப்பமான செபம். அற்புதமான செபம். செபமாலை வழியாகத் தூய கன்னி மரியாவிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட வரங்கள் எத்தனை எத்தனை! செபமாலையில் மரியாவுடன் இணைந்து இயேசுவின் திருமுகத்தை ஆழந்து தியானிப்பதால் தந்தையின் பேரன்பை உணர்கிறோம். தூய ஆவியாரின் மகிழ்ச்சியில் அகமகிழ்கிறோம். அப்போது தான் நாம் அனைவரும் முக்காடு இல்லா முகத்தினராய் ஆண்டவரின் மாட்சியைப் பிரதிபலிக்கிறோம். இவ்வாறு மென்மேலும் மாட்சிப் பெற்று அவர் சாயலாக மாற்றம் அடைகிறோம். இவையெல்லாம் ஆவியாம் ஆண்டவரின் செயலே (2கொரி 3:18) அடுக்கிக்கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என நினைக்கின்றனர். (மத் 6:7) என்ற இயேசுவின் எச்சரிக்கையை மனதில் கொள்வோம்.

அமைதியான சந்தத்துடன் ஆண்டவர் வாழ்வின் மறையுண்மைகளை அன்னை கண்ட காட்சிகளைக் கொண்டே தியானித்து செபமாலை செபிப்பதால் ஆழம் கண்டறிய முடியாத அளவுக்கு ஞானப்பலன்கள் மறையுண்மைகளிடமிருந்து வெளிப்படும். செபமாலை சமாதானத்திற்கான செபம். இயேசுவே நம் சமாதானம். சமாதானத்தின் இளவரசர். நமக்கு அமைதி அளிப்பவர். செபமாலையில் இயேசுவின் மறையுண்மைகளை தியானிப்பதில் நாம் மூழ்கவேண்டும். இயேசுவே நமக்கு சமாதானம் அருள்பவர். அவரே இரு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்ற சுவரை தம் உடலில் ஏற்றுத் துன்பத்தின் வழியாக தகர்த்தெறிந்து ஒன்றுபடுத்தினார். (எபே 2:14)

## கன்னி மரியாவின் செபமாலை!

**திருத்தந்தை புனித 2ம் ஜோன் போல்**



மீட்புக்காக கடவுள் மனித உரு எடுத்தப் பேருண்மையை மையமாகக் கொண்டதால் செபமாலை கிறிஸ்துவின் வாழ்க்கைப் பண்பு கூறும் இறையியல் உள்ளடக்கிய செபம். செபமாலை தியானத்திற்கு திருவிவிலிய அடிப்படை மற்றும் மிகுந்த ஆழம் அமையவேண்டும் எனில் செபமாலை பேருண்மையை சொன்னவுடன் அந்தச் சூழ்நிலைக்கு தொடர்புடைய பெரிய அல்லது சிறிய விவிலியப் பகுதியை எடுத்து வாசிக்க வேண்டும். தூய ஆவியாரால் தூண்டப்பட்ட வார்த்தைகளுக்கு ஈடு ஏது?

திருவழிபாட்டில் பங்குகொள்வதால் மட்டும் ஆன்மீக வாழ்வு முழுமை பெறாது. பொது செபத்திற்கு அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் தங்கள் உள்ளறைக்குச் சென்று கதவை அடைத்துக் கொண்டு மறைவாய் உள்ளத் தந்தையிடம் வேண்டவேண்டும் (மத் 6:6).

திருத்தூதர்களின் போதனைப்படி இடைவிடாது இறைவனிடம் வேண்ட வேண்டும் (1தெச 5:17). செபமாலையே உட்சுவர் சுற்று வண்ணக்காட்சிகள் அடங்கிய இடைவிடா செபம். ஆன்மீகச் சிந்தனை இல்லையெனில் செபமாலை ஆன்மா இல்லா உடல் போன்றது. இறைவனிடம் வேண்டும்போது புற இனத்தாரைப் போல் பிதற்றவேண்டாம். மிகுதியான சொற்களை

புனிதத்தில் வளர செபமாலையே உண்மையான வழி எனப் புனிதர்கள் கண்டுப் பிடித்துள்ளனர். புனித லூயி தெ மோன்போர்த், புனித பியோ செபமாலை செப வெற்றி வீரர்கள். செபமாலை பக்தியைப் பரப்பும் எவரும் மீட்புப் பெறுவர் என அருளாளர் பார்டோலோ லோங்கோ குறிப்பிடுகின்றார்.

செபமாலையின் முடிவில் திருத்தந்தையின் கருத்துக்களுக்காக செபிக்கும்போது நம் அறிவு விளக்கம் விரிவடைந்து திருச்சபையின் தேவைகளுக்காகவும் செபிக்கிறோம். திருச்சபை சலுகையாக வழங்கும் பேறுபலன்களை பெறுகிறோம். வரலாற்றில் பலத் தருணங்களில் கிறிஸ்தவ மறை அடியோடு அழிக்கப்பட அச்சுறுத்தப்பட்டபோது செபமாலையின் வல்லமை காப்பாற்றியது. அன்னையே இறைவனிடம் பரிந்துபேசி திருச்சபையை மீட்டார் என்றுப் பாராட்டப்படுகிறார். இன்று உலக சமாதானம், எமது நாட்டில் நிலவும் பயங்கரவாதம், குடும்பம் இவைகளை காக்கும் பொறுப்பை செபமாலையின் வல்லமையிடம் ஒப்படைப்போம்.


செபமாலை குடும்பத்திற்கான செபம். ஒரு காலத்தில் செபமாலை கிறிஸ்தவக் குடும்பங்களில் மிகவும் நேசிக்கப்பட்ட செபம். செபமாலை...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்

கமிலஸ்





# என் தலைவா...! என்னை ஏன் அழைத்தாய்...?

## ஓவ்வொரு வருடமும், பாஸ்கா காலத்தின் 4 ஆம் ஞாயிறு

## இறை அழைத்தல் – நல்லாயன் ஞாயிறு

## உங்கள் வீடு கடவுள் வாழும் கோயில்..

ஒவ்வொரு வருடமும், பாஸ்கா காலத்தின் 4ம் ஞாயிறு இறை அழைத்தலின் ஞாயிறு. நல்லாயன் ஞாயிறு என்றும் அழைக்கப்படுகிறது. 1963ஆம் ஆண்டு புனித திருத்தந்தை 6ம் பவுல் இதனை பிரகடனப்படுத்தினார். இந்த சிறு கட்டுரை வழியாக இத்தினத்தின் முக்கியத்துவத்தை இரு கோணங்களில் பார்க்க விரும்புகிறேன்.

முதலாவது பார்வை குருவானவருக்குரியது. நம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் அழைப்பு (கணவன், மனைவி, ஆசிரியர், சமூக சேவையாளர், குரு, துறவி) எதுவாக இருந்தாலும் அது இறை அழைத்தல் என்பதை மனதில் இருத்துவோம். ஆனால் இக்கட்டுரையில் குருத்துவ, துறவற அழைப்பைப் பற்றி மாத்திரம் பார்ப்போம். ஒவ்வொரு குடும்பமும் இறை அழைத்தலின் விளை நிலமே. நற்செய்தியை அறிவிக்க இறைவன் இயேசு பன்னிருவரைத் தேர்ந்தெடுத்தார். அதனைத் தொடர்ந்து இன்று வரைக்கும் இயேசு பலரை அழைத்துக் கொண்டுதான் இருக்கின்றார். அது நீயாக கூட இருக்கலாம்.

**‘‘அறுவடையோ மிகுதி வேலை ஆட்களோ குறைவு. ஆகவே அறுவடைக்கு தேவையான வேலை ஆட்களை அனுப்புமாறு, அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்”**

என்று கூறினார் இயேசு. எனவே, அறுவடைக்கு தேவையான வேலை ஆட்களை அனுப்புமாறு, அறுவடையின் ஆண்டவரிடம் நாம் தினமும் மன்றாட வேண்டும். சில தடவைகளில் நெஞ்சுக்கு நிறைவாக திருப்பலியை கொண்டாட முடியவில்லை என்று தமிழ் மக்கள் நீங்கள் ஆதங்கப்பட்டது உண்டு. போதாக்குறைக்கு தமிழ் மொழியில் திருப்பலி கொண்டாடுவதற்கு குருக்களின் பற்றாக்குறை கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உண்டு. இதனை யார் ஈடுசெய்வது? எங்கே இருந்து தமிழ் குருக்களை பெறுவது? ஞூரணை? குழழனஉவைல? ஊயசபடைடள? இல்லவே இல்லை. இதனை ஈடுசெய்ய உங்களால் தான் முடியும். உங்கள் குடும்பங்கள் தான் இறை அழைத்தலின் விளைநிலம். அதனை நீங்கள் மறக்கவே கூடாது. பெற்றோர் நிலையில் இருந்து நீங்கள் தான் உங்கள் பிள்ளைகளை தட்டிக் கொடுக்கவேண்டும். உங்கள் பிள்ளைகளிடம் இறை ஊழியத்தைப்பற்றி உரையாட வேண்டும். குருத்துவ துறவு வாழ்வைப் பற்றி பிள்ளைகளோடு பேசவேண்டும். *என் பிள்ளை வருங்காலத்தில் படித்து பெரிய ஒரு ஆளாக வர வேண்டும்* என ஒவ்வொரு பெற்றோரும் கனவு காண்பது இயல்பானது. ஆனால் குருத்துவ, துறவு வாழ்வு பற்றி கனவு காண்பது வெகு குறைவு. மறை ஆசான்களே இவ்விடயத்தில் நீங்கள் பாரிய பணிதனை நிறைவேற்ற முடியும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். மறைக்கல்வி மாணவரிடம் இறை ஊழியத்தைப் பற்றி பேச முடியும். ஒரு சிலரை நீங்கள் இனங்காணலாம். அவர்களிடம் அதிகமான அக்கறை எடுத்து தட்டிக் கொடுத்து ஒரு குருவானவரோடு தொடர்பு ஏற்படுத்தி கொடுக்கலாம். எங்கள் குடும்பங்கள் சுருங்கிவிட்டதால் ஆசைக்கும் ஆஸ்திக்கும் ஒவ்வொருவர் இருப்பதனால் எவரையும் இறை ஊழியத்துக்காக இழக்க விரும்புவதில்லை. மேலும் பலரோடு நான் இதைப் பற்றி கலந்துரையாடியபோது, பதில்கள், காத்திரமானதாக இல்லை. நம் இளைஞர்கள் குருத்துவ துறவு வாழ்வு மட்டில் ஆர்வம் காட்டுவதில்லை. ஏன்? கொழும்பில் வாழும் ஒவ்வொரு தமிழ் குடும்பங்களும் இதையிட்டு சிந்தித்து காத்திரமான முடிவுகள் எடுக்க வேண்டும். பெரும்பாலும் தமிழ் குருக்கள் இல்லையென்று கவலைப்படும் நாம் அதனை நிவர்த்தி செய்ய காத்திரமான பங்களிப்பு செய்ய முன்வருவதில்லை.

ஒவ்வொரு வருடமும் பலர் கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு குருவாக திருநிலைப்படுத்தப்படுகிறார்கள். அவ்வேளையில் ஒருவராவது தமிழராக இருக்கமாட்டாரா? என எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு இல்லாத போது கவலையடைகின்றோம். யார் இதனை நிவர்த்தி செய்வது? சில வேளைகளில் மறைமாவட்ட ஆயரில் குறை காண்கின்றோம். என் பிள்ளையை இறை ஊழியத்துக்கு கொடுக்க எனக்கு விருப்பமுண்டா? கடவுளின் அருளோடும் உங்கள் ஒத்துழைப்போடும் இதனை செய்ய முடியும் என நம்புங்கள். முதலாவது உங்கள் குடும்பம் புனிதமானது என்பதை உணர்ந்து, அதற்கேற்ப வாழுங்கள். உங்கள் பிள்ளைகளும் அவ்வாறு வாழ அவர்களை பயிற்றுவியுங்கள். உங்கள் வீடு கடவுள் வாழும் கோயில் என்பதை மறவாதீர்கள். மேலும் உங்கள் குழந்தைகளில் ஒருவரையாவது இறைவன் அழைக்க வேண்டும் என்று மன்றாடுங்கள். உங்கள் பங்குத் தந்தைக்காக, உங்கள் பங்கில் பணியாற்றும் துறவிகளுக்காக மன்றாடுங்கள். அவர்களில் குறை இருக்கும் மன்னியுங்கள். உங்கள் குருக்களுக்கு, துறவிகளுக்கு உறுதுணையாக இருங்கள். உங்கள் குருக்கள், துறவிகள் தூய்மையானவர்களாக இருக்க, அர்ப்பணத்தோடு வாழ, அழைத்தலில் இறுதிவரை பிரமாணிக்கமாக இருக்க மன்றாடுங்கள்.

ஒரு பொதுநிலையினர் எவ்வாறு ஒரு குருவானவரை, துறவியை பார்க்கின்றார் என்பது இரண்டாவது பார்வை. குருவானவரும், துறவியுமாகிய நீங்கள் உங்கள் பரிசுத்தமான வாழ்வு மட்டில் அக்கறை கொண்டு இருக்க வேண்டுமென்று விரும்புகின்றோம். நீங்கள் செபத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்று ஆசிக்கின்றோம். மேலும் உங்களிடம் இருந்து உயர்ந்த ஒழுக்க நெறி வாழ்வை பொது நிலையினராக நாம் எதிர்பார்க்கின்றோம்.

மேய்ப்புப்பணியில், எங்களுடைய மணத்தை, அல்லது நாற்றத்தை அறிந்தவராக, எங்களில் ஒருவராக ஆர்வமுள்ள நல்ல ஆயனாக எங்களை வழிநடத்துவீர்கள் என்று நம்புகின்றோம். மேலும் உங்கள் இறைவாக்குப் பணியில், இறைவார்த்தையைக் கொண்டு காயப்பட்ட இதயத்திற்கு மருந்து போடவும், கல்லான இதயத்தை உடைக்கும் சம்மட்டியாகவும் செயலாற்றும் இறைவாக்கினராக பார்க்க ஆசைப்படுகின்றோம். திருப்பலி மற்றும் ஏனைய அருளடையாள கொண்டாட்டத்தின் வழியாக எங்களை தூய்மையாக்கி இறையருள் மழையில் நனைய வழிகாட்டுவீர்கள் என்று உறுதியாக நம்புகின்றோம். சுகபோக வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கின்ற பொருட்கள் மீது நீங்கள் கொண்டுள்ள பற்றினை அகற்ற வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம். ஈற்றிலே ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, ஏழை மக்களின் விடியலுக்காக தன் வாழ்வை பலி கொடுத்த, பயமற்ற பாதுகாவலர் என்று அழைக்கப்படும் எல்சல்வமோர் பேராயர் புனித ஒஸ்கார் ரெமேரோ ஆயரின் வார்த்தைகளில் இச்சிந்தனையை நிறைவு செய்கின்றேன்.

அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

## எச்சரிக்கை !

நீதி நியாயத்துக்காக , உழைக்காத திருச்சபை
எதிர் விளைவுகளைச் சந்தித்து, துன்புற விரும்பாத திருச்சபை

அதிகாரத்தைப் பயன்படுத்தி, முன்னுரிமை தேடிக் கொள்ளும் திருச்சபை
பணம், பதவியில், மகிழ்ந்து போகும் திருச்சபை

கடவுளின் பெயரைச் செல்லி, பணம் பண்ணும் திருச்சபை
நிச்சயமாக இயேசு கிறிஸ்துவின், திருச்சபையாக இருக்க முடியாது’

## மனமே...! என் மனமே...!!

### மனித குண்டு தாக்குதலிலிருந்து பிழைத்துக் கொண்டாயா...?

ஏன் தப்பினாய்.... நீ நல்லவன் என்பதாலா? கடவுள் உன்னில் அன்பாக இருப்பதாலா? அல்லது நீ கடவுளை அன்பு செய்வதாலா? உன் பெற்றோர் நல்லவர்கள் என்பதாலா? நீ பல நன்மைகள், தர்மங்கள் செய்ததாலா...?

இல்லவே இல்லை. நீ விழித்துக் கொள்ளவே...

விழித்தெழு...! விரைந்து செல்...!!

இறைவன் உன்னிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை அவர் முன்னிலையில் சென்று கேள். உன் விருப்பமல்ல, இறைவன் விருப்பம் நிறைவேற உன்னை எதிர்பார்க்கிறார்....

**ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில்**
**மானிட மகன் வருவார்**




# உறவு

இயேசு விருப்பப்படி இளையோர் படைக்க வேண்டிய உலகம் உயர்ந்த இலட்சியம் ஆளுமை உடையதாய் இருக்கவேண்டும். ஆளுமைக்குள்ளிருக்கும் ஆற்றலை வெளிக்கொணர இயேசுவை நினைக்கவேண்டும். இயேசுவின் உயர்ந்த உறவையும் புத்துலகில் பரப்பவேண்டும். எனவே உயர்ந்த உறவு எது? அதை இயேசு எவ்வாறு கடைப்பிடித்துப் பரவலாக்கினார் என்பதனை இவண் காண்போம்.

உலக உறவுகளில் உயர்ந்தது எது? உலகில் பல உறவுகள் காணப்பட்டாலும் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. கணவன் மனைவி, தாய் பிள்ளை, நண்பன், உறவுகள். இவற்றுள் தலை சிறந்தது எது? கணவனும் மனைவியும் ஒரே உடலாயினும் (எபே 5:31) கணவன் தலை, மனைவி உடல் (எபே 5:23, 1கொரி 11:3) என்ற ஏற்றத்தாழ்வு நிலவுவதால் இவ்வுறவு முதலிடம் பெறவில்லை. தாய் தன் பிள்ளையை ஒருபோதும் கைவிடாத உறவு (எசா 49:15) ஆனாலும் சமத்துவம் இல்லாததால் புறம் தள்ளப்பட்ட உறவு. ஆயினும் நண்பர்களுக்குள் எப்போதும் சமத்துவம் வளரும் (யோவா 15:15). தாய் பிள்ளையிடமிருக்கும் ஒளிவு மறைவு நண்பர்களிடம் இராதாகையால் இதுவே மிகச் சிறந்த உறவெனப் போற்றப்படுகிறது.

விவிலிய மரபின் வழி சிறந்ததெனப் போற்றப்படுவதும் நட்புறவே. ஆபிரகாம் (தொ.நூ 2:1, 15:1) ஈசாக்கு (தொ.நூ 26:1-6) யாக்கோபு (தொ.நூ 32:21-31) மோசே (வி.ப 33:11-16) கடவுளுக்கு நேருக்கு நேராக நண்பர்கள் போல் உரையாடினார்கள் தாவீதும் யோனத்தானும் நட்பின் சிறந்த மாதிரிகள் (1 சாமு 18:1, 19:1, 20:17, 2 சாமு 1:26) இப்பாரம்பரியம் திருப்பாடலில் புகழப்படுகிறது. என் தோழன் நீ, என் நண்பனும் என்னோடு நெருங்கிப் பழகுகிறவனும் நீதான். நாம் ஒன்று சேர்ந்து உரையாடினோம். கடவுளின் இல்லத்தில் பெருங்கூட்டத்தினடையே நடமாடினோம் (தி.பா 55:13-14) இந்நட்புறவையே இஸ்ரயேல் வழிபாட்டில் கண்டறிந்து வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் எடுத்துச் சென்றன.

இஸ்ரயேல் குடும்பத்திலே வளர்ந்து வந்த இயேசு மரபு வழிவரும் நட்புறவை இயல்பாகப் பெற்றுக்கொண்டார். தாயையும் சகோதரரையும் நண்பராகப் பாவித்தார். (லூக் 8:21, 11:28) தம் உடன்பிறவா சகோதரரையும் நண்பராகப் பாவித்தார் (யோவா 13:23, 19:26, 20:2, 21:7,20). இலாசரை ஆருயிர் தோழன் என அழைத்தார் (யோவா 11:3,36). சீடர்களையும் நண்பர்களாகப் பார்த்தார் (லூக் 12:4, 11:5-8, யோவா 14:26, 15:14-15). பாவிகளுடனும், ஆயக்காரர்களுடனும் நட்புறவு கொண்டாடினார் (மத் 9:11, 11:19, லூக் 7:34) தம் குடும்பச் சூழலில் கற்றறிந்த உயர் உறவே அவருடைய போதனைப் பொருளானது.

இயேசு தாம் வாழ்ந்த அனுபவித்த நட்பை உயர்ந்ததெனப் போதித்தார். “உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு” என்ற வாக்கின்படி ஆபத்துக்கு உதவுபவன்தான் நல்ல நண்பன். நல்ல சமாரியனை நட்பின் மாதிரியாக முன் வைக்கிறார் (லூக் 10:25-37). இரவில் கதவைத் தட்டுகிறவனுக்குப் படுக்கையை விட்டு எழுந்து உணவு கொடுக்கிறவன் சிறந்த நண்பன் (லூக் 11:5-8) நூற்றுவர் தலைவன் ஊழியரைக் குணமாக்கினார் (மத் 8:5-13). பன்னிரு ஆண்டளவாக உவாதைப்பட்டவளைக் குணப்படுத்தினார் (மத் 9:20-22). 38 ஆண்டுகளாகப் படுக்கையிலே இருந்தவரை எழுப்பிவிட்டார் (யோவா 5:5-9). கானானிய பெண்மணிக்கும் நண்பரானர் (மத் 15:21-28). இவ்வாறு உலகுக்கே நண்பராக இருக்கும்படி போதித்தார்.

இயேசு போதித்ததைச் சாதித்துக் காட்டினார். சமூக விரோதிகள் அல்லது துரோகிகள் என்பவர்களைச் சமூகத்திற்கு நண்பர்களாக மாற்றினார். சக்கேயுவுக்குச் சமூகத்தை நேசிக்கக் கற்றுக்கொடுத்தார் (லூக் 19:1-9). சமாரியப் பெண்ணைத் தமது ஊழியராக்கினார் (யோவா 4:1-42). கிறிஸ்தவர்களுக்கு விரோதியான சவுலையும் நண்பர் பவுலாக மாற்றிக் காட்டினார் (தி.ப 9:1-9). ஆனால் நண்பர் போல் நடித்து நயவஞ்சகர்களாக விளங்கிய பரிசேயர் சதுசேயரை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்களை வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் (மத் 23:27) என்றும், விரியன் பாம்புக் குட்டிகள் என்றும் (மத் 12:34, 23:33) வசைபாடுகிறார். எனினும், தாம் மனம் மாற்றியவர்களை நட்புறவின் பணியாளராக்கினார்.

இயேசு தமக்குச் செவிமடுத்துத் தம்மை ஏற்றுக்கொண்டவர்களை (மத் 10:1-10, லூக் 9:1-6) தம்மோடு இருப்பதற்காகத் தேர்ந்தெடுத்தார் (மாற் 3:13). இப்பொழுது அவர்களுக்கு நண்பர்கள் எனப் பெயரிடுகிறார். இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்லமாட்டேன் உங்களை நான் நண்பர்கள் என்றேன் (யோவா 15:15). சீடர்களுக்கு இது புதிதாகத் தோன்றியது. உரோமையர்கள் தங்களை அடிமைகள் எனக் கருதிக் கொண்டிருக்க வாழும் கடவுளின் மகனான இயேசு தங்களை நண்பர்கள் என்றதும் வியப்பின் எல்லைக்கே சென்றுவிட்டனர். இந்த உயர்ந்த அழைப்பிற்கு அவர்களைத் தகுதியுடையவராக்க பக்குவமான பயிற்சி அளித்தார்.



தம் சீடருக்கு நட்புறவில் பற்றி வாழ சிறந்த பயிற்சியளிக்கலானார். தம் அருகில் அமரச் செய்தார். அவர்கள் அவரைப் பார்த்துக் கேட்டு, பேசி மகிழ்ந்தனர் (1யோவா 1:1). அவருடைய மார்பிலே சாய்ந்திருந்தார் (யோவா 13:23). அவரோடு உரையாடினார், உறவாடினார் (மத் 13:1-9, மாற் 4:1-9, லூக் 8:4-8). அவர்களோடு உண்டார் (மத் 26:26-30, மாற் 14:22-26, லூக் 22:15-20). எல்லா வாழ்க்கை நிலையிலும் பங்கு பெற்றனர் (எபி 4:15). சீடரின் தவறுகளைத் திருத்தினார் (மத் 18:1-5). இவ்வாறு இயேசு அப்போஸ்தலர்க்குச் சிறந்த நண்பராகி அவர்களுக்கு நட்பைக் கற்றுக்கொடுத்து நட்பிலே அவர்களைப் பழக்கி அவர்களைச் சமூகத்திற்குச் சிறந்த நண்பராக்கினார். நட்பின் செய்தியை அறிவிக்க அவர்களை அனுப்பினார்.

அப்போஸ்தலர் உலகெங்கிலும் சென்று (மத் 28:19, மாற் 16:15) நட்பின் அடிப்படையில் மக்களை கட்டி எழுப்பினார்கள். அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள் (தி.ப 2:42-46).

நட்புறவில் குழுமியவர்கள் பிறரன்பு நிறைந்தவராய் வாழ்ந்து வந்தார்கள். அனைவரும் ஒரே உள்ளமும் உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை (தி.ப 2:32-34). இவ்வாறு இயேசுவின் மதிப்பீடுகளின் அடிப்படையில் மக்களைக் கட்டி எழுப்பி இயேசுவின் கனவை நனவாக்கினர் சீடர்கள்.

சீடர்கள் இயேசுவின் அடிச்சுவட்டில் நண்பர்களாக நடந்தனர். உயிரையும் பணையம் வைத்து நட்புக்குச் சான்று பகர்ந்தனர். இதே பாரம்பரியம் நமது கலாச்சாரத்திற்கும் உண்டு. பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன், பொய்யா மொழி சீனக்கன், பாரி, கபிலர், கோப்பெருஞ்சோழன் பொத்தியா, அதியமான் ஔவையார் யாவரும் நட்பின் எடுத்துக்காட்டுகள். இவர்கள் நட்பெனும் கலாச்சாரத்தைப் பரப்பி சமுதாயத்தைக் கட்டி எழுப்பியவர்கள். இவர்களுடைய மாதிரியைப் பின்பற்றிட கவிஞர்கள் அழைக்கிறார்கள்.

என்னை நானாக ஏற்று என் திறமைகளை வெளிக்கொணர என்னைச் சவாலுக்கு உட்படுத்தி, என் உணர்வுகளைத் தன் உள்ளத்தில் உணர்ந்து என் வெற்றியில் அகமகிழ்பவன்தான் உண்மையான நண்பன். என் வாழ்க்கைத் தேடலிலே வெற்றியில் என்னை மார்தட்டி நிற்கச் செய்பவன் உண்மையான நண்பன். தோல்வியிலே நம் தோள்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கும் நண்பர்களைத் தேடுவோம். நட்பு என்னும் கடலுக்குள் காலமெல்லாம் நீந்த துணையாக அவர்கயையும் அழைத்துக் கொள்வோம்.

மற்றவர்களுக்கு வாழ்வு கொடுக்க வந்த நாமே வாழ்வை இழந்தால் எப்படிப் பிறருக்கு அதை வழங்க இயலும்? ஆகவே நம் நட்பிற்குள் வரும் எவரையும் வாழ்வைப் பிறருக்குக் கொடுப்பவராக மாற்றுவோம். இதுவே முரண்பாடுகளைக் களைவதாகும். முரண்பாடுகள் மத்தியிலும் உறவுகள் தழைத்தால் அதுவே புத்துலகிற்கு வழியாகும் என்பதை இளையோர் புரிந்துகொள்ள வேண்டும்.

*****************





# இறைவன் நமக்காகப் போராடுவார்!

## “இது உங்களுடைய போர் அல்ல, என்னுடைய போர். நீங்கள் அமைதியுடன் இருந்து ஆண்டவர் செய்யப்போகும் மகத்துவங்களைப் பாருங்கள் ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார்”

தொடக்கத் திருச்சபையின் காலத்தில் உரோமையில் கி.பி 400 ஆண்டுகள் கிறிஸ்துவின் பிள்ளைகள் வேதகலாபனையால் மிகுந்த துன்பம் அனுபவித்து வந்தார்கள். கொடிய மிருகங்களுக்கு இரையாகப் போடப்பட்டார்கள். சிரச்சேதமும், வாளால் வெட்டுண்டு வேதசாட்சிகளாகவும் மரித்தார்கள்.

இக்காலச் சூழ்நிலையில் மேக்சிமியன் என்ற கொடுங்கோல் மன்னனின் இராணுவத்திலும் கிறிஸ்துவைப் பின்பற்றிய இராணுவ வீரர்கள் இருந்தார்கள். இச்சமயத்தில் பொகிமியா நாட்டு படைகள் உரோமைப் படைகளைச் சூழந்துகொண்டு பெரும் தாக்குதலில் உரோமை வெற்றி கொள்ள படைவீரர்களின் கோட்டையை சூழ்ந்துகொண்டார்கள்.

கோட்டைக்குள் இருந்த மக்களும் படைவீரர்களும் தண்ணீரும், உணவும் இன்றி சாகும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அரசன் மேக்சிமியன் கலக்கமடைந்தார். கலங்கினார். எதிர்வரும் பெரிய ஆபத்தை உணர்ந்தார். உடனே அவர் கிறிஸ்துவின் படைவீரர்களை நோக்கி இந்த ஆபத்திலிருந்து விடுதலை பெற நீங்கள் இரட்சகர் என விசுவசிக்கும் இறை இயேசுவிடம் செபியுங்கள் என்றார்.

விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் அவர்கள் செபிக்க ஆரம்பித்த சில மணி நேரத்திலேயே பெருமழை கொட்ட ஆரம்பித்தது. தண்ணீர் கரைபுரண்டு ஓடியது. தண்ணீரிலும், ஆகாயத்திலும் உணவருந்திய இராணுவம் திடமடைந்து பொகிமியா படையை எதிர்கொண்டு வெற்றி பெற்றார்கள். கிறிஸ்துவின் பிள்ளைகளுக்கும், நாட்டிற்கும் சமாதானம் பிறந்தது.

400 ஆண்டுகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்து கானான் நோக்கி வந்து கொண்டிருந்தபோது செங்கடலால் வழிமறிக்கப்பட்டார்கள். எகிப்தின் படைகளாலும் பின்தொடரப்பட்டார்கள். கலங்கிய நிலையில் மோயிசன் கலங்கியபோது ஆண்டவர் மோயிசன் வழியாக “இது உங்களுடைய போர் அல்ல, என்னுடைய போர். நீங்கள் அமைதியுடன் இருந்து ஆண்டவர் செய்யப்போகும் மகத்துவங்களைப் பாருங்கள் ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார்” என்கிறார். அப்படியே செங்கடல் இரண்டாய் பிரிகிறது. இஸ்ரயேலர் நடந்து கடலைக் கடந்தார்கள். அதே கடலில் எகிப்தின் படைகள் அழிந்தன. (வி.ப 14:10-14)

இஸ்ரயேல் மக்கள் கானான் நோக்கிய பயணத்தில் எரிக்கோவின் கோட்டையை எதிர்கொள்-கிறார்கள். இறைவன் யோசுவாவின் மூலம் பேசினார். அதன்படியே ஏழு நாள்கள் அக்கோட்டையைச் சுற்றி வந்தார். இறைபுகழ் பாடிக்கொண்டே கோட்டையைச் சுற்றிவந்த அவர்களுக்கு கோட்டை ஏழாம் நாளில் உடைந்து வெளிப்புறமாக விழுந்தது. ஏனெனில் கோட்டையைச் சுற்றி அகழியின் பள்ளம் இருந்தது. விழுந்த கோட்டைச் சுவர் அப்பள்ளங்களை மூடியது. எனவே, மிக எளிதாக இஸ்ராயேலர் எரிகோவைக் கைப்பற்றினார்கள்.

இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வழிநடத்த வந்த மோயிசன் இறுதிக் காலத்தில் இஸ்ராயேலர்கள் அமலேக்கியருடன் எதிர்கொண்டு போரிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். எனவே, இராப்பிதின் என்ற இடத்தில் போர் ஆரம்பித்தது. மோயிசனோ அவர்கள் வெற்றி பெற வேண்டுமென்று ஒரு மலைக்கு ஆரோன், கூர் என்ற இரண்டு பேரை அழைத்துக் கொண்டு செல்கிறார். மலையிலிருந்த பாறையின் மீது மண்டியிட்டு செபிக்க ஆரம்பிக்கிறார். கைகளை உயர்த்தி அவர் செபிக்க, செபிக்க அங்கிருந்த இஸ்ராயேலர் முன்னோக்கிச் சென்று வெற்றி பெறுவதைக் காண்கிறார். கைகள் வலியால் தாழும்போது இஸ்ரயேலின் படைகள் பின்னோக்கி வருகிறார்கள்.

எனவே இரண்டு பேர் மோசேயின் இரு பக்கத்திலும் இருந்துகொண்டு அவரின் இரு கைகளையும் தாங்கி, கரங்கள் வானோக்கி எழும்பி செபிக்க செபிக்க இஸ்ரயேல் மக்கள் வெற்றி பெற்று மகிழ்வடைகிறார்கள் (வி.ப 14:8-13). மேலும் நாம் 2 குறிப்பேடு 20ஆம் அதிகாரத்தை எடுத்து வாசித்தால் ஜோசபாத்து என்ற எருசலேம் மன்னன் எப்படி பகைவர்களை வென்றான் என்பதைக் காணும்போது கடவுளின் கருணையைக் காண்கிறோம். ஜோசபாத் மன்னனை மிக எளிதாக வென்று விடலாம் என்று மோவாபியரும், அம்மோனியரும், மெயூனியரும் ஒன்றுசேர்ந்து எருசலேம் மீது படையெடுத்து வருகிறார்கள். இறைபக்தி நிறைந்த ஜோசபாத் பயந்த நிலையில், தனி அறையில் இறைவனைப் பார்த்து செபிக்கிறார். அவ்வாறே யூத மக்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி, நோன்பு, காக்க கட்டளையிடுகிறார்.



ஜோசபாத்தும், யூத மக்களும் ஒன்றுகூடி உபவாசித்து செபிக்கிறார்கள். அனைவரும் செபிக்கும்பொழுது தூய ஆவியானவர் கயகாசியேவின் மேல் இறங்கினார். ஆண்டவர் அவன் மூலமாய் இவ்வாறு பேசுகிறார்... **“நீங்கள் எதிரியின் பெரும் படையை கண்டு அஞ்சவும் வேண்டாம், நிலை கலங்கவும் வேண்டாம். இப்போர் கடவுளின் போரே அன்றி, உங்களுடைய போர் அன்று”** என்கிறார்.

அடுத்து இறைவனின் அருள்துணையை நம்பி ஜோசபாத் மன்னன் தன் சிறிய படையுடன் அம்மூவரையும் எதிர்கொள்கிறார். முப்படைகளும் இச்சிறு படையைக் கண்டு “நாம் ஒருவரே இவனை வென்றுவிடலாம். ஒவ்வொருவரும் நினைத்து அவர்களுக்குள்ளே சண்டையிட்டு அனைவரும் மடிந்தார்கள். அவர்களின் படைக் கருவிகளையும், ஆயுதங்களையும் யூதப் படைவீரர்கள் எருசலேமில் கொண்டு சேர்க்க மூன்று நாள்கள் ஆனது. ஜோசபாத் மன்னர் இறைவனின் அருள் துணையால் வெற்றியடைந்தார்.


இன்றைய நாட்களில் எம் நாட்டின் நிலையைக் கண்டு கலங்காதிருப்போம். இக்கொடூர சம்பவத்தினால் பீதி அடைந்திருக்கும் மக்களே, உறவுகளை இழந்து தனிமையில் வாழுபவர்களே, சொந்தங்களை இழந்து சோகத்தில் இருப்பவர்களே, இனி என்ன நடக்குமோ என்று கலங்கி கொண்டிருப்பவர்களே இதோ, இறைவன் கூறுகின்றார். உனக்காக நான் போராடுவேன். எமது நாடு ஆபத்துக்குள்ளாகி வருகிறது என்று எண்ணுவார்க்ள. இன்னுமொரு கலாபனைக்கு முகம்கொடுத்து வருகின்ற திருச்சபை, இவற்றுக்கு எல்லாம் தீர்வு இல்லையா? என்று ஏங்கும் அன்பர்களுக்கு இறைவன் கூறுகின்றார் உங்களுக்காக நான போராடுவேன்.



### திருப்பாடல் 91

**உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர். ஆண்டவரை நோக்கி, ‘நீரே என் புகலிடம் என் அரண், நான் நம்பியிருக்கும் இறைவன்’ என்று உரைப்பார். ஏனெனில், ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும் கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார். அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார், அவர்தம் இறக்கைகளின்கீழ் நீர் புகலிடம் காண்பீர், அவரது உண்மையே கேடயமும் கவசமும் ஆகும். இரவின் திகிலுக்கும் பகலில் பாய்ந்துவரும் அம்புக்கும் நீர் அஞ்சமாட்டீர்.**

**இருளில் உலவும் கொள்ளை நோய்க்கும் நண்பகலில் தாக்கும் கொடிய வாதைக்கும் நீர் அஞ்சமாட்டீர். உம் பக்கம் ஆயிரம்போர் வீழ்ந்தாலும், உம் வலப்புறம் பதினாயிரம் பேர் தாக்கினாலும், எதுவும் உம்மை அணுகாது. பொல்லார்க்குக் கிடைக்கும் தண்டனையை நீரே பார்ப்பீர், உம் கண்ணாலேயே நீர் காண்பீர். ஆண்டவரை உம் புகலிடமாய்க் கொண்டீர் உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர். ஆகவே, தீங்கு உமக்கு நேரிடாது, வாதை உம் கூடாரத்தை நெருங்காது. நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி, தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார். உம் கால் கல்லின்மேல் மோதாதபடி, அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக்கொள்வர். சிங்கத்தின்மீதும் பாம்பின்மீதும் நீர் நடந்து செல்வீர், இளஞ்சிங்கத்தின்மீதும் விரியன் பாம்பின்மீதும் நீர் மிதித்துச் செல்வீர். அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால், அவர்களை விடுவிப்பேன், அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன், அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது, அவர்களுக்குப் பதிலளி-ப்பேன், அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன், அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன், நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன், என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.** இத்திருப்பாடலை நாள்தோறும் கூறி இறைவனிடம் செபிப்போம், அவர் நமக்காகப் போரிடுவார்.



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பேதுரு**

### பாஸ்காகாலத்தின் 5வது ஞாயிறு (19.05.2019)

**வாசக விளக்கம்:** பாஸ்கா காலத்தின் 5வது வாரத்தில் கால்பதிக்கும் இறைமக்களாகிய நமக்கு "கடவுள் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" என்ற செய்தி தரப்படுகின்றது. இயேசுவில் தான் அன்பு முழுமை பெற்றது. அவரில்தான் அது முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது. அதன்பிறகு உருவமிருந்தால் அது இயேசுவைப் போல இருக்கும். அதனுடைய பேச்சு, செயல், சிந்தனை மற்றும் பண்பெல்லாம் இயேசுவின் பண்பையே ஒத்திருக்கும். இயேசுவைப் போல அன்பு செய்தவர் எவருமில்லை. நாம் அவரின் சீடத்துவ வாழ்வை பின்பற்றுகிறோம் என்றால் அவரைப் போல அன்பு செய்ய, மன்னிக்க, ஏற்றுக்கொள்ளவேண்டும். அன்புப் பயணத்தில் நாம் பவுல் அடியாரைப் போன்று துன்பங்களையும், துயரங்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும், கிறிஸ்துவின் அன்பை பிறரோடு பகிர்வதில் நாம் ஆர்வமாய் இருக்கவேண்டும். எனவே கிறிஸ்து எவ்வாறு நம்மைத் தேடிவந்து அன்பு செய்கின்றாரோ அதுபோல நாமும் பிறரை அன்பு செய்ய அருள் வரம் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தி.ப 14:21-27**

திருஅவையைக் கூட்டி கடவுள் தங்கள் வழியாகச் செய்த அனைத்தையும் அறிவித்தார்கள்.

**பதிலுரைப் பாடல் :**

என் கடவுளே உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன்.

**இரண்டாம் வாசகம் : தி.வெ 21:1-5**

கடவுள் அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார்

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா அல்லேலூயா ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவான் 21:1-19**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா!
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவின் அன்பை எல்லோருக்கும் சமமாகவும் பொதுவாவும் வழங்கி திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் இறைமக்கள் பெற்று மகிழ வழிகாட்டவும் கடவுளின் அன்பு இயேசுவில் முழுமை பெற்றது என்பதை உணர்த்தவும் வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

கடவுள் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்பதை உணர்ந்து பிறரை அன்பு செய்யவும் அன்பின் முழுவடிவமாகத் திகழ்ந்த இயேசுவைப் பிற்பற்றி இனமத மொழி பேதங்களை மறந்து அனைவரையும் சமமாக மதித்து பிறரன்புப் பணிகளில் ஈடுபடவும் வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

ஏழை எளியவர் வலுவிழந்தோர், அனாதைகள் மீது நாம் பிரிவு கொண்டு அன்பு செலுத்தவும், அவர்கள் தேவைகளில் உதவவும் அன்பிற்காக ஏங்குவோர் மட்டில் நம்பிக்கையுடன் அன்பு செலுத்தவும், நம்மில் அவர்கள் இயேசுவைக் கண்டு மகிழவும் இயேசு தந்த அன்பின் புதிய கட்டளையை எம் வாழ்வில் பின்பற்றி நடக்கவும் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

### பாஸ்காகாலத்தின் 6வது ஞாயிறு (26.05.2019)

**வாசக விளக்கம்:** பாஸ்குகாலத்தின் 6வது ஞாயிறு தின திருப்பலியில் பங்குபெற வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களே! இவ்வுலகில் வாழும் நாம் அமைதியைத் தேடி அலைகின்றோம். இவ்வுலகமும் இவ்வுலக செல்வங்களும் நமக்கு அமைதியை தந்துவிடும் என நாம் நம்பி ஏமாந்து போகின்றோம் இந்நிலையில் தான் இன்றைய நற்செய்தியில் இயேசு கூறுகின்றார். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தருகின்ற அமைதி போன்றதல்ல என்று. உலகம் தருகின்ற அமைதி மக்களைப் பிரித்தாள்வது கடவுள் தரும் அமைதி மக்களை ஒன்றிணைப்பது இன்றைய சமூக குடும்ப வாழ்வில் அமைதியை அடைய நாம் என்ன செய்யவேண்டும் என்பதை முதல் வாசகம் விளக்குகிறது. உலகம் சொல்வதைக் கேட்டு "அமைதி இழந்து வாழும் நாம் கடவுள் சொல்வதைக் கேட்டு வாழும்போது உண்மையான அமைதியை பெறுகின்றோம். இதற்கான அருள்வரத்தை வேண்டிடப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : தி.ப 15:1-2,22-29**

இன்றியமையாதவை தவிர வேறு எந்தச் சுமையையும் உங்கள் மேல் சுமத்தக்கூடாது என்று தீர்மானித்தோம்.

**பதிலுரைப் பாடல் :**

கடவுளே மக்களினத்தார் எல்லாரும் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக.

**இரண்டாம் வாசகம் : தி.வெ 21:10-14,22-23**

திருநகர் கடவுளிடமிருந்து விண்ணகத்தை விட்டு இறங்கி வருவதை எனக்குக் காட்டினார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா அல்லேலூயா என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர் மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 14:23-29**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா!
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உலகில் நிலையான அமைதியை உருவாக்க உழைக்கும் திருஅவையின் ஊழியர்களான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள், பொதுநிலை ஊழியர்கள் ஆகிய அனைவரும் என்றும் அமைதியின் தூதர்களாக செயல்பட்டு உண்மையான அமைதியை உலகினில் உருவாக்க அயராது உழைத்திட வேண்டிய மனவலிமையைத் தந்தருள வேண்டுமென்று...

பல்வேறு நிலைகளில் பணிக்காக அழைக்கப்பட்டுள்ள நாமும் இயேசுவை மையமாகக் கொண்டு பணியாற்றவும், அடுத்தவர் மீது பரிவுடன் நடந்து கொள்ளவும், அமைதியை உருவாக்கும் பணியில் திருஅவையின் தலைவர்களோடு இணைந்து செயல்படவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

"என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார்" என்ற இயேசுவின் வார்த்தையை ஏற்று நாம் நடக்கவும் இயேசுவோடு உடனிருந்த ஆவியானவர் நம்முடனும் இருக்கின்றார் என்பதை நாம் உணர்ந்து செயல்படவும் அன்பும் அமைதியும் எம்மிடையே உருவாக நாம் உழைக்கவும் வரமருள வேண்டுமென்று...

## ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 07


# பயனற்ற செருக்கினின்று நீங்குதல்

- எல்லாச் செயல்களையும் உணர்ச்சியையும் நம்பக்கூடாது. ஆனால், அவற்றை இறைவன்முன் கவனமாகப் பொறுமையாகச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.
- மனிதர்களிடமோ, வேறு படைப்புகளிடமோ நம்பிக்கை கொள்பவன் பயனற்றவன்.
- இயேசு கிறிஸ்துவின் அன்பிற்காகப் பிறருக்குச் சேவை செய்யவும், இவ்வுலகில் ஏழையாகத் தோன்றவும் உனக்கு வெட்கம் வேண்டாம்.
- உன்னில் நீ நம்பிக்கை கொள்ளவேண்டாம். மாறாக, இறைவனில் நம்பிக்கை கொள்.
- உன்னால் இயன்றதைச் செய். இறைவன் உனது நன்மனத்திற்குத் துணை நிற்பார்.
- உன் அறிவிலோ, மனித தந்திரத்திலோ நீ நம்பிக்கை வைக்கவேண்டாம். மாறாக, ஆணவம் கொள்பவர்களைத் தாழ்த்தி, தாழ்ச்சியுடையவருக்குத் துணை புரியும் இறைவனின் அருளில் நீ நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- உனது செல்வத்திலோ, வலிமை பெற்ற நண்பர்களிலோ நீ பெருமை கொள்ள வேண்டாம். மாறாக, எல்லாம் தந்து, எல்லாவற்றிற்கும் மேலாகத் தம்மையே தர ஆவல் கொள்ளும் இறைவனில் மகிமை கொள்ளவேண்டும்.
- சிறு நோயினால் கெட்டு உருவிழக்கும் உடலின் வலிமை பற்றியோ அழகு பற்றியோ அகந்தை கொள்ளாதே.
- உன் திறமை, மூதறிவு இவற்றை எண்ணி உன்னையே தேற்றிக்கொள்வாயானால், இயல்பாக உன்னில் அமைந்திருக்கும் எல்லா நன்மைகளுக்கும் உரியவரான இறைவனுக்கு உகந்தவனாய் இருக்கமாட்டாய்.
- நீ பிறரைவிட மேலானவன் என்று உன்னை மதிக்காதே. ஏனெனில் மனிதனின் உள்ளத்தை அறியும் இறைவன் முன் நீ இழிந்தவனாய் இருக்க நேரலாம்.
- உனது நற்செயல்களை எண்ணிப் பெருமைப்படாதே. ஏனென்றால், இறைவனின் கருத்தும் மனிதனின் கருத்தும் வேறுப்பட்டிரு-க்கின்றன. மனிதனுக்கு விருப்பம் தருவது இறைவனுக்குப் பெரும்பாலும் வெறுப்பு ஊட்டுகிறது.
- நீ தாழ்ச்சியில் நிலைபெற வேண்டுமானால், உன்னில் இருக்கும் நன்மைகளைவிடச் சிறந்தவை பிறருக்கு இருப்பதாகக் கருது
- எல்லாரையும் விட உன்னைத் தாழ்த்துவதால் தீமை விளைவதில்லை. ஆனால், யாரேனும் ஒரு மனிதனுக்கு மேலாகவாவது உன்னை உயர்த்துவதால் பெரும்பாலும் தீமையே விளைகிறது.
- தாழ்ச்சியுள்ள உள்ளத்தில் அமைதி உறையும். மாறாக ஆணவக்காரனின் இதயத்தில் பொறாமையும், கோபமும் தாம் மலிந்திருக்கும்.

தொடரும்

# தேவ அழைத்தல் தினம் 2019 – “தூய மே

## ஆயரின் செய்தி



இவ்வருட இறையழைத்தல் ஞாயிறின் கருப்பொருளான **“தூய மேய்ப்பர்களாவதற்கு அழைக்கப்பட்டோர்”** பிரதிபலிப்பது தலைமைக்குருவும் நல்லாயனுமாகிய இயேசுவின் குருக்கள் அவருடைய சொந்த இதயத்திற்கு பின் அவருடன் இருக்க வேண்டும் என்பதற்காக அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். திருச்சபையில் குருத்துவத்தை அறிந்து கொள்வதற்கு முதலாக கிறிஸ்தவ விசுவாசிகள் தமது திழுமுழுக்கின்

**அதிவண ஆயர் வின்ஸ்டன் பெர்ணாண்டே ந.நா.ச**
**ஆயர்– பதுளை மறைமாவட்டம், தலைவர்,**
**குருக்கள், துறவிகள் மற்றும் குருமடங்களுக்கான கத்தோலிக்க தேசிய ஆணையம்**

வழியாக பொதுக்குருத்துவத்தில் பங்குகொள்கின்றனர். இதனை 2ம் வத்திக்கான் சங்க ஏடாகிய திருச்சபை எனும் கொள்கை திரட்டு பின்வருமாறு குறிப்பிடுகின்றது. இறைமக்களின் பொதுக்குருத்துவமும் பணிக்குருத்துவமும் தமது தன்மையில் வேறுபட்டது அல்ல, அவை ஒன்றுக்கொன்று குறைந்தவையும் அல்ல மாறாக தமது நிலையிலிருந்து கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குகொள்கின்றன (திருச்சபை 10)

கிறிஸ்து தமது இரத்தத்தினால் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார் என்பது எங்களுடைய அடிப்படை மறைக்கல்வி (1கொரி 11:25). இவ்வாறு தமது உடலினால் அல்ல ஆவிக்குரிய மக்களாவதற்கு எல்லா இனங்களையும் அழைக்கின்றார். “ஆனால் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர் அரச குருக்களின் கூட்டத்தினர் தூய மக்களினத்தினர் அவரது உரிமை சொத்தான மக்கள்” (1பேதுரு 2:9-10).

குருத்துவ அபிஷேகத்தினால் ஒருவர் தமது பொதுக்குருத்துவத்தை இழந்து விடுவதில்லை மாறாக இதன் வழியாக தலையாகிய கிறிஸ்துவுடன் ஒருவர் உறுதிப்படுத்தப்படுகின்றார். இதனால் ஒவ்வொரு அங்கத்தவரும் தூய்மையாக இருக்க அழைக்கப்படுகின்றனர் காரணம் உடலின் தலை தூய்மையானவர். இதனால் உடலின்றி தலையில்லை தலையின்றி உடலுமில்லை. திருமுழுக்கு பெற்ற குழந்தை முதல் முதியோர் வரை தூய்மை நிலை வாழ்வுக்கு அழைக்கப்படுகின்றார்கள்.

இந்நிலையில் நாம் கேட்க வேண்டிய கேள்வி கிறிஸ்து தம் திருச்சபையுடன் எதனை பகிர்ந்து கொள்கிறார்? பரிசுத்த ஆவியின் செயல்பாட்டின் மூலம் திருச்சபையின் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் மீது கைகளை வைத்து செபிப்பதன் மூலம் அரச குருத்துவ இறைவாக்குரைக்கும் பணியின் மூலம் பரிசுத்தமாக்குவதற்கும், கற்பிப்பதற்கும், மேய்ப்பதற்கும் தன் பணியினை பகிர்ந்து கொள்கிறார். குருத்துவத்தின் முழுமையான ஆயர்த்துவ அபிஷேகத்தின் மூலம் திருச்சபையின் பணியாளர்கள் முப்பெரும் பணிகளை பல்வேறு நிலைகளில் மேற்கொள்ள அழைக்கப்படுகின்றார்கள். அடிப்படையில் தூய வாழ்வு என்பது கிறிஸ்துவின் பணியிலும் அவருடைய தலைமைக் குருத்துவத்தில் பங்கேற்பதிலும் அமைந்துள்ளது.


நடைமுறையில் குருத்துவப் பணியும் வாழ்வும் பொருத்தமான தகுதியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இது கிறிஸ்துவுடன் மிக நெருக்கமான முறையில் தொடர்புடையது. கிறிஸ்துவால் பரிசுத்த குருத்துவத்திற்கு தோந்து கொள்ளப்பட்டோர் அவருக்கெதிராக சாட்சிய வாழ்வு வாழும் போது ஐயோ அவர்களுக்கு கேடு. ஏழ்மை, கீழ்படிவு, கற்பு போன்ற புண்ணியங்களின் ஊடாக வாழும் போது ஒரு குரு தன்னுடைய வாழ்வில் கிறிஸ்துவை பிரதிபலிக்கின்றார்.

குரு, அருளடையாளங்களை நிறைவேற்றும் பணியாளர், திருச்சபையின் மனநிலையிலிருந்தும், கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் வழியாகவும் கடவுளின் மக்களை பரிசுத்தப்படுத்தவும் பரிசுத்த ஆவியின் செயற்பாடுகளை அடையாளங்கள் வழியாக பெறுவதற்கு மறைக்கல்வி வழியாக தயாரித்து தன் குருத்துவ பணிகளை நிறைவேற்றுகின்றார். நற்கருணையின் மறைபொருளை நிறைவேற்றி வாழும் குரு கிறிஸ்துவை பிரதிபலித்து தன்னை பிறருக்காக அர்ப்பணிப்பதிலும் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். பாஸ்காமறைபொருள் வழியாக குரு பரிசுத்தமாக்கப்படுகின்றார்.

குரு, இறைவார்த்தையின் பணியாளர். கிறிஸ்துவின் வார்த்தையை வாசித்து இறைமக்களுக்கு போதிப்பதன் வழியாக போதிக்கும் பணியை நிறைவேற்றுகின்றார். எனவே குரு இறைவார்த்தையை வாசித்து அறிவிக்கவும் தான் போதிப்பதை வாழ்வாக்கவும் அழைக்கப்படுகின்றார். இறைவார்த்தையை தியானிப்பதன் வழியாகவும் செபங்களை செபிப்பதன் வழியாகவும் போதிக்கும் பணியை பரிசுத்தமாக்குகின்றார். கிறிஸ்துவின் பொதுநிலைவாசிகள் தங்கள் பணியில் முழுமையை அடைய எதிர்பார்க்கப்படுவது போல குருக்களும் தங்கள் பணியில் முழுமை பெற அழைக்கப்படுகின்றார்கள். கடவுளை அன்பு செய்தல் அயலாரை அன்பு செய்வதாகும் தனது சொந்த மந்தையை அன்புசெய்ய வேண்டும். தனது குழுமத்தில் மன்னிப்பு, நல்லிணக்கம், நீதி மற்றும் அமைதியை ஏற்படுத்த வேண்டும். இவை குருக்களை பரிசுத்தமாக்குகின்றது.

குரு, தனது மேய்ப்புப்பணியை இறைஊழியர் என்ற நிலையை அறிந்து தனது பொதுநிலை மக்களுக்கு பணி புரிகின்றார் (1பேதுரு 5:3). திருத்தந்தை பிரான்சிஸ் உலக திருச்சபையின் பணியில் பங்குபற்றுவதற்கு விசுவாசிகளை அழைப்பதோடு பங்கு சமூகங்களிலும்...

15




**குருக்களும் துறவிகளும் தம் மந்தைகளைக் கண்காணிக்க தம்முயிர்த் தியாகம் செய்கின்றனர்.**

**எக்காலமும் அவர்கள் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்**

**கரங்கள் அவர்கள் மீது வைக்கப்பட்டன, அவர்கள் கரங்கள் திருப்பொழிவு செய்யப்பட்டன, அபிசேகிக்கப்பட்டன.**

குருக்கள் உங்களது நண்பர்கள். அவர்கள் உங்களுக்கு **திருமுழுக்கு** அளிக்கின்றனர், **திவ்ய நற்கருணைக்கும், உறுதிப்பூசுதலுக்கும்** தயார் செய்கின்றனர். கடவுளோடு ஒப்புரவாக்குகின்றனர். உங்களது **திருமணத்தை** ஆசீர்வதிக்கின்றனர். **நோயிற்பூசுதலால்** சுகம் தருவதுடன் ஒருநாள் உங்களது இறுதிச்சடங்கினையும் நடாத்துவர். இறைவனின் திருப்பெயரால் குருவே உங்களோடு கூட நடந்து **தொட்டில்** முதல் **சுடுகாடு** மட்டும் விண்ணகத்தின் வழியினைக் காட்டுகின்றார். **குருத்துவமும் துறவறமும்** புனிதமானவை. குருக்களும் துறவிகளும் உங்களது மகனும் மகளுமாவர். அவர்களுக்காகவும் வேண்டுங்கள். குருக்களும், துறவிகளும், குருமாணவர்களும் உங்களுக்காக மன்றாடுகின்றனர்.

எல்லா உருவாக்கலின் இல்லங்களிலும்போல **“தேசிய குருமடத்தின் நண்பர்கள் பணித்திட்டம்”** எனும் மையப்பொருளின் கீழ் விசுவாசிகளின் வேண்டுதல்களுக்காக செபங்கள் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன. இவ் விசேட வேண்டுதலுக்காக தங்களது கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

# மய்ப்பர்களாவதற்கு அழைக்கப்பட்டோர்”

## குருக்கள் கிறிஸ்துவின் தூய, உயிருள்ள, விசுவாசத்தின் பிரதிபலிப்பு



**அதிவண எக்ஸ்படிடஸ் ஜயக்கொடி**
**அதிபர்– தேசிய குருமடம்.**

முழுத்திருஅவையும் கிறிஸ்துவின் குருத்துவ அருட்பொழிவில் தூய ஆவியினுள் பங்குகொள்கின்றது. இத்திருஅவையில் அனைத்து விசுவாசிகளும் இணைந்தே தூய அரச குருத்துவத்தை உருவாக்குவதுடன், இயேசுகிறிஸ்துவின் வழியாய் கடவுளுக்குகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும், இருளிலிருந்து வியத்தகு ஒளியிற்கு அழைத்து வந்ததன் அளப்பரிய செயல்களை எடுத்துக் கூறுபவர்களாகவும் இருக்கின்றார்கள். (1 பேதுரு 2:5,9). இதனால் கிறிஸ்துவின் மறையுடல் அனைவரின் மீட்புக்காக தூய ஆவியின் மூலம் தந்தையுடன் ஒன்றித்திருக்கின்றது. ஆயினும் திருஅவை தனியாக இப்பணியை செய்ய முடியாது. அனைத்துப் பணிகளும் திருஅவையின் தலையாகிய கிறிஸ்துவோடு உள்ளார்ந்த ரீதியாக இணைந்ததாக காணப்பட வேண்டும். கிறிஸ்துவோடு பிரிக்கமுடியாதபடி இணைந்துள்ள இத் திருஅவையானது அருளை, உண்மையின் விளைவுகளை, ஆதரவை, வழிகாட்டல்களை தொடர்ந்து அவரிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவே “கிறிஸ்துவில் இத்திருஅவை ஓர் அடையாளம் போல் விளங்ககிறது. அதாவது இறைவனோடு உள்ள நெருங்கிய ஒன்றிப்பிற்கும், மனித குலம் முழுவதன் ஒற்றுமைக்குமான அடையாளமும் கருவியுமாய் உள்ளது“. (திருச்சபை எண் 1). இப்பணிக்குருத்துவமானது கிறிஸ்துவோடு திருஅவை கொண்டுள்ள உன்னதமான உறவினை மையப்படுத்தியதாக காணப்படுவதுடன், கிறிஸ்துவினுடைய உறுதியான பணியை தொடர்ந்து வழங்கி, முடிவில்லா குருத்துவத்தின் வழியாக கிறிஸ்து தன்னை திருஅவையிலிருந்து பிரித்துப்பார்த்தில்லை என்ற உறுதியான உண்மையை தெளிவுபடுத்துகின்றது. இந்தக் காரணத்தால் தான், திருஅவையானது குருத்துவப் பணிவாழ்வினை திருச்சபையின் சில விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்ட கொடையாகக் கருதுகின்றது. கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்டு அவருடைய மீட்பு பணியினை தொடர்வதற்காக அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்ட இப்பணி இடைவெளி எதுவுமின்றி இறுதிவரை தொடர்ந்து இத்திருஅவையில் நிலைபெற்றுள்ளது. குருத்துவ அழைப்பு மற்றும் துறவற வாழ்வானது விசேடத்துவமும், தனித்துவமும், உலகளாவியதான பண்புகளையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இப்பண்புகளை அழைப்புப் பெற்றோர் பல்வேறு வகையான மக்களிடமிருந்தும், தேசங்களிலிருந்தும் பெற்றுக்கொள்கின்றனர். இதுவே ஒவ்வொரு அழைத்தல் வாழ்வினுடைய தனித்துவத்திற்கும் காரணமாகின்றது. சமூகத்தின் பார்வையில் அல்லது வெளித்தோற்றத்தில் குருத்துவமானது ஒரு உயர்ந்த தொழிலாக கருதப்படலாம். ஆனால் அவை அனைத்தையும் விட பணிக்குருத்துவமானது அதன் அடிப்படைத் தோற்றத்திலும், தன்மையிலும், அதன் பணியிலும் நோக்கத்திலும் மற்றைய சாதாரண அழைப்பு நிலைகளிலிருந்து மாறுபட்டதாக காணப்படுகின்றது. இவ்வுலக தொழில் வாய்புக்கள் சிறியது முதல் சிறந்தது வரை, பொறியியல் முதல் விஞ்ஞான மற்றும் கலைத்தத்துவத்திலும் மனிதனின் உயரிய கலாசாரம் உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றன. இவையனைத்தும் தமது உருவாக்கத்தையும், வளர்ச்சியையும் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் தமது பொருளாதார, சமூக கலாச்சார ஏற்றத்தாழ்வுகளையும் கொண்டு காணப்படுகின்றன. இது எல்லா சாதாரண வேலைகளுக்கும் பொதுவானதாகும். ஆகவே இவையனைத்தும் எவ்வாறு இவ்வுலக நாட்டங்களில் தம்மை நிலைநிறுத்தி உள்ளன என்பதை குறித்து நிற்கின்றது.

இவ்வுலக தொழில் நிலைகளைப் போன்று மனித ஏற்றத்தாழ்வுகளை கொண்டதாகவோ அல்லது அவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகவோ குருத்துவ வாழ்வு அமையப் பெறவில்லை. மாறாக காலமாற்றத்திற்கு உட்படாமல், மனித வரலாற்றில் மாற்றமடையாத, மாற்றமுடியாத ஒரு வாழ்வாகவே தோன்றியுள்ளது. காலப்போக்கில் சில மாற்றங்களை சந்தித்த போதும் அதனது உள்ளாந்த நோக்கத்திலும் தன்மையிலும் எப்போதும் மாறுபாடு அடையாததாகவே காணப்படுகின்றது. குருத்துவமானது திருஅவையைப் போன்று, இவ்வுலக மனிதத்தேவைகளில் இருந்து உருவாக்கப்பட்டது அல்ல என்ற உண்மையை ஆழமாக வெளிப்படுத்துகின்றது. கிறிஸ்துவே தலைமைக்குருவாக இருந்து குருத்துவத்தை ஏற்படுத்தியதால் மனிதனால் அல்ல மாறாக கடவுளால் உருவாக்கப்பட்டது. அவரே புதிய ஏற்பாட்டின் குருத்துவத்தை ஏற்படுத்தி அதற்கு அர்த்தத்தையும் நோக்கத்தையும் கொடுத்து, அவருக்கு தேவையானவர்களை தேர்ந்து கொள்கிறார். ஒவ்வொரு குருத்துவ துறவற அழைப்பானது அதனது உள்ளார்ந்த நிலையில் ஒரு மறைபொருளாகும். மேலும் இது தனிமனிதத் தன்மையைக் கடந்த ஒரு மேலான கொடையாகும். இம் மேலான கொடையின் முன், அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் நிறைவின்மையை, முழுமையின்மையை உணர்கின்றார்கள்.

உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்ற ˚இறையழைத்தல் ஞாயிறு” தினத்தில் திருஅவையானது தனது முழுநம்பிக்கையையும் ஆண்டவரது வாக்குறுதிகளில் நம்பிக்கை கொண்டு பல இளைஞர் யுவதிகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அழைப்புக்கு சிறந்த முறையில் பதில் கூற வேண்டும் என்பதற்காக தொடர்ந்து செபிக்கின்றது.

15



**இலங்கை அன்னையின் தேசிய குருமடம் அம்பிட்டிய கண்டி 1893ம் ஆண்டு பாப்பரசர் குருமடமாக ஆரம்பிக்கப்பட்டு 1955ம் ஆண்டு இலங்கை அன்னையின் தேசிய குருமடமாக உருவாக்கப்பட்டது.**




**புனித சவேரியார் குருமடம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1980**



**களுத்துறை திரு இருதய ஆண்டவர் இடைநிலை குருமடம் உருவாக்கப்பட்ட ஆண்டு 1979**

**குருத்துவ துறவற இறையழைத்தல்களுக்காக செபிப்போம்!**

**நற்செய்திக்காக தம் வாழ்வை தியாகம் செய்திட உங்கள் மகன்மாரையும் மகள்மாரையும் ஊக்குவியுங்கள்!**

**ஆன்மீக ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் உருவாக்கலின் இல்லங்களுக்கு உதவுங்கள்!**

தொடர்புகளுக்கு : அருட்பணி. இயக்குனர், தேசிய குருமடம், அம்பிட்டிய
*Email: nsakandy@sltnet.lk*
*Web:www.nationalseminarysrilanka.org*

# இயேசு நாதர் தேர்ந்தெடுத்த சீடர்கள் 12



இம்மானிட குலத்தின் மீட்பராக இவ்வுலகில் தோன்றியவர் இயேசு. இவரை பின்பற்றும் கோடிக்கணக்கானோர் இன்று உலகம் முழுவதும் பரவி உள்ளனர். இயேசுபிரான் வாழ்ந்த முப்பத்து மூன்று ஆண்டுகளில் கடைசி மூன்று ஆண்டுகள் அவராலே தேர்ந்தெடுத்த 12 சீடர்கள்அவருடன் இருந்தனர்.

1. புனித. சீமோன் பேதுரு 2. புனித. அந்திரேயா 3. புனித யாக்கோபு 4. புனித. யோவான் 5. புனித பிலிப்பு 6. புனித பர்தலேமியு 7. புனித தோமா 8. புனித மத்தேயு 9. புனித யாக்கோபு 10. புனித. ததேயு 11. புனித. சீமோன்(கானானியன்) 12. யூதாஸ் கரியோத்

யூதாஸ் கரியோத் சீடர் பங்கினை இழத்தல்:

இயேசுநாதரின் போதனைகளை அன்றிருந்த உரோமானிய அரசும், யூத மதவாதிகளும் சிறிதும் விரும்பவில்லை. இயேசுவை பழித்தீர்க்க வகை தேடினர்.

இத்திட்டத்தின்படி இயேசுநாதரின் பன்னிரு சீடர்களில் ஒருவனான யூதாஸ் கரியோத்தை அணுகி 30 வெள்ளிக்காசுகளை கொடுத்தனர். இதற்கு கைமாறாக காரியோத்து இயேசு நாதரைக் காட்டிக்கொடுக்க ஒப்புக்கொண்டு அதன்படியே செய்தான். உரோமானிய அரசு, குற்றமற்ற இயேசுவின் மேல் பழி சுமத்தியது. இயேசு சிலுவையில்அறையப்பட்டார்.

இப்பாவச் செயலைக் கண்ட யூதாஸ் மனமுடைந்தான். குற்றமில்லா ரத்தத்திற்கு பழியாகி விட்டதை எண்ணி வேதனையடைந்து தான் வாங்கிய 30 வெள்ளியை வாங்கியவர்களிடம்கொடுக்கச் சென்றான். அவர்களோ மறுத்து விட, அப்பணத்தை தேவாலயத்தில் எறிந்து விட்டு தூக்குக் கயிற்றில் உயிர் விட்டான். (புனித மத்தேயு 27:5)

# கடல் சீற்றம் தணித்த அன்னை



17ம் நூற்றாண்டில் வேளாங்கண்ணியில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அயல்நாடுகளில் வியாபாரம் செய்யும் போர்த்துக்கீசியக் கப்பல் ஒன்று, சீன துறைமுகத்திலிருந்து புறப்பட்டு வங்காள விரிகுடா வழியாக, இலங்கை நோக்கி சென்று கொண்டிருந்தது.

பருவநிலை நன்றாக இருக்கவே மாலுமிகள் சந்தோஷமாகக் கப்பலை செலுத்தினர். இந்நிலையில் திடீரென்று கார்மேகம் சூழ்ந்தது. காற்று வலுத்தது. கடல் கொந்தளித்தது. புயலடித்தது. அலைகள் மலையாய் எழுந்து வர கப்பல் தத்தளித்தது.


கப்பல் மாலுமிகளும், வியாபாரிகளும் செய்வது அறியாது தவித்தனர். இனி உயிர் பிழைப்பது கடினம் எனக் கருதி தேவ மாதாவைத் துதித்தனர். அவர்கள் பிரார்த்தனைக்குப் பலன் கிடைத்தது. மாதாவின் கருணையால் கடல் கொந்தளிப்புத் தணிந்தது. முட்டி மோதி கப்பலை கலங்கடித்த அலைகள் அமைதியாயின.

உடனே மாலுமிகள் நின்ற இடத்தில் இருந்து கரைக்குக் கப்பலைச் செலுத்தினர். கப்பல் கரைக்கு வந்து சேர்ந்த இடம் வேளாங்கண்ணி. அவர்களைக் கண்ட கிராம மக்கள் ‘எல்லாம் ஆரோக்கிய மாதா அருள் தான்’ எனச் சொல்லி வேளாங்கண்ணியில் ஏற்கனவே இருந்த குடிசைக் கோயிலுக்கு வழிகாட்டினர்.

போர்த்துக்கீசிய வியாபாரிகளும், கப்பல் மாலுமிகளும் ஆலயத்துக்கு சென்று மாதாவை வழிபட்டு நன்றி செலுத்தினர். அன்றைய தினம் செப்டம்பர் 8ம் திகதி. அன்று அன்னையின் பிறந்த நாள்.

பெரும் ஆபத்திலிருந்து தங்கள் உயிரையும், உடைமையையும் காப்பாற்றிய மாதா குடிசையில் இருப்பதைக் கண்டு ஆலயம் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்த அவர்கள், 24 அடி நீளத்திலும் 12 அடி அகலத்திலும் அழகிய மண்டபத்துடன் கூடிய கற்கோயிலைக் கட்டினர். மீண்டும் தங்கள் சொந்த நாடு சென்று, திரும்பவும் மறுமுறை வந்தபோது அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்ட சீன பீங்கான் ஓடுகளை வாங்கி வந்து ஆலயத்தை அழகுப்படுத்தினர்.

அந்த பீங்கான் ஓடுகளில் புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு பைபில் நிகழ்ச்சிகளை விவரிக்கும்ஓவியங்கள் உள்ளன. இன்றும் அவை ஆலயத்தை அழகுப்படுத்தி அலங்கரிக்கின்றன. ஆகவே ஆபத்துக்களில் காப்பாற்றும் நம் அன்னையிடம் நம் நாட்டை பாதுகாக்கும்படி மன்றாடுவோம்





# விவிலியம் அறிவோம்

## விவிலியம் வாசிக்க...

## விவிலியப் பகுதி




### மாற்கு நற்செய்தி அதிகாரங்கள் 01 முதல் 02 வரை

01. மாற்குவின் தாய் பெயர் என்ன?
02. மாற்கு யாருடைய உறவினர்?
03. மாற்கு யாருக்கு துணையாக திருத்தொண்டில் ஈடுபட்டிருந்தார்?
04. இந்நூல் எழுதப்பட்ட காலம் எது?
05. இந்நூல் யாரை கண்முன் நிறுத்தி எழுதப்பட்டது?
06. மாற்கு நற்செய்தியின் ஆசிரியர் யார்?
07. திருமுழுக்கு யோவானைப் பற்றி முன் அறிவித்த இறைவாக்கினர் யார்?
08. திருமுழுக்கு யோவான் எதைப்பற்றி பறைசாற்றினார்?
09. யூதேயாவினர், எருசலேம் நகரினர் அனைவரும் என்ன செய்தனர்?
10. யோவான் உடுத்திய ஆடை என்ன?
11. யோவான் எதை உணவாக உண்டார்?
12. இயேசு கிறிஸ்துவைப் பற்றி யோவான் தன்னிடம் திருமுழுக்கு பெறவந்த மக்களிடம் என்ன சொன்னார்?
13. யோர்தான்ஆற்றில் யோவானிடம்திருமுழுக்கு பெற்றுவிட்டு ஆற்றிலிருந்து கரைஏறும்போது என்ன நிகழ்ந்தது?
14. இயேசு கிறிஸ்து திருமுழுக்கு பெறும்போது வானத்திலிருந்து ஒலித்த குரல் யாது?
15. இயேசு கிறிஸ்து பாலை நிலத்தில் எத்தனை நாட்கள் இருந்தார்?
16. பாலை நிலத்தில் இருக்கும்போது யாரால் சோதிக்கப்பட்டார்?
17. பாலை நிலத்தில் இருக்கும்போது பணிவிடை செய்தது யார்?
18. இயேசு கலிலேயாவில் எப்படி போதித்தார்?
19. இயேசு கிறிஸ்துவின் முதல் சீடர்கள் யார்?
20. இயேசு முதல் சீடர்களை என்ன சொல்லி அழைத்தார்?
21. இயேசு எப்படி கற்பித்தார்?
22. கப்பர்நாகும் ஊரில் இயேசு யாரை குணமாக்கினார்?
23. சீமோன் பேதுருவின் வீட்டிற்கு சென்று யாரை குணமாக்கினார்?
24. ‘நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக’ என செல்லி இயேசு யாரை குணமாக்கினார்?
25. நலமடைந்த தொழு நோயாளியிடம் இயேசுஎன்ன சொன்னார்?

15ம் பக்கம்

வர்ணம் தீட்டுங்கள்





## மாணவர் ஒளி

# உன்னோடு ஒரு நிமிடம்



# உன் செயல்களை அல்ல, உன்னையே அன்பு செய்கின்றேன்.

உன் செயல்கள் முக்கியமல்ல நீதான் எனக்கு முக்கியம். நான் உன்னை உன் செயல்களை வைத்து எடை போடவில்லை. நான் உன் செயல்களை வைத்து அன்பு செய்வதில்லை.

நான் உன்னைப் படைத்தேன் இதுதான் உன்னை நல்லவனாக்குகின்றது. நான் உன்னை எனது சாயலாகப் படைத்தேன் இதுதான் உன்னை நல்லவனாக்குகிறது. நீ எனது பிள்ளை இதுதான் உன்னை நல்லவனாக்குகிறது. நீ எனது படைப்பின் சிகரம் இதுதான் உன்னை நல்லவனாக்குகிறது. உன் செயல்களுக்கு பல காரணங்கள் உண்டு. உன்னில் உள்ள ஒருசில செயல்கள் உன்னை ஒரு கெட்ட மனிதனாய் மாற்றிவிட முடியாது. நீ கட்டிய புதிய வீட்டில் குறை ஒன்று இருப்பதால் அவ்வீட்டை இடித்துத் தள்ள வேண்டியதில்லை. ஒரு தாய் தன் சேயிடம் குறைகள் பல பார்த்-தாலும் அத்தனையையும் பொறுத்துக்கொண்டு பிள்ளையை அன்பு செய்கிறாள். குழந்தை-யைத் தள்ளிவிட மாட்டாள் மறந்துவிட மாட்டாள். உன் தாய் உன்னை மறந்தாலும் நான் உன்னை மறவேன்! உன் தாய் உன்னை அன்பு செய்ய மறந்தாலும் நான் உன்னை அன்பு செய்ய மறப்பதில்லை! ஒரு சில சமயங்க-ளில் வெளித் தோற்றங்-களையும் வெளிச் செயல்களையும் பார்த்து உன்னையே நீ எடை போடுகின்றாய் அது தவறு. நான் உன்னை அப்படிப் பார்ப்பதில்லை. அப்படி எடை போடுவது-மில்லை. நான் உன்னை உன்னிடமுள்ள குறை நிறைகளோடு அன்பு செய்கின்றேன்.உனது செயல் என் அன்பை மாற்ற முடியாது. உனது செயல்களைக் கடந்து நான் உன்னை அன்பு செய்கின்றேன். எனக்கு உன் மேல் உள்ள அன்பு நிபந்தனையற்ற அன்பு!

நீ நல்லவனாய் இருந்தால் உன்னை அன்பு செய்வேன் நீ என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் உன்னை அன்பு செய்வேன். நீன் என் எதிர்பார்ப்பின்படி நடந்தால் நான் உன்னை அன்பு செய்வேன். நீ என்னை அன்பு செய்தால் நான் உன்னை அன்பு செய்வேன் என்ற நிபந்தனைகளை நான் விதிப்பதில்லை. நான் உன்னை அன்பு செய்கிறேன். உன்மேல் எனக்குள்ள அன்பு எந்த நிபந்தனைகளையும் கொண்ட அன்பன்று எனது அன்பு கொடுக்கக் கொடுக்கக் குறையாத அன்பு.

கிணற்றில் உள்ள நீரை எடுக்க எடுக்க அது வற்றாமல் இருப்பதுபோல் என் அன்பு குறையாத அன்பு.

எல்லோரையும் முழுமையாக அன்பு செய்யும் அன்பு ஒரு சிலரை நூறு விழுக்காடும் இன்னும் சிலரை எண்பது விழுக்காடும் மற்றும் சிலரை இருபது விழுக்காடும் அன்பு செய்கின்ற அன்பு என் அன்பன்று எல்லோரையும் நூறு விழுக்காடு அன்பு செய்கின்றவன்தான் நான்

நான் உன்னை அன்பு செய்வதால் என் அன்பிற்கு பதில் அன்பாக நீ என்னைத் திருப்பி அன்பு செய்ய வேண்டும் என்று நான் விரும்புவதில்லை.

நீ எனக்குப் பதில் அன்பு காட்ட விரும்பினால் நீ உன்னையும் உன் அயலானையும் அன்பு செய் இதுதான் எனது ஆசை அப்படிச் செய்யும்போது நீ என்னையே அன்பு செய்கின்றாய்.

# இரங்குமையா மனம் இரங்குமையா

இறைவனைத் தேடி இறைஇல்லம் சென்றோம்
இதயங்கள் பூரிக்க இறை சமூகம் சேர்ந்தோம்
இறைவா எங்கிருந்தோ வந்தது இடியென ஓசை
இருக்கையில் இழந்தோம் இதயம் பிளந்ததையா
இறை சந்நிதி சிதறியதையா!

ஏங்கிய இதயங்கள் ஏக்கத்தில் இரண்டாகப் பிளந்ததையா
ஏனோ தானோ எம்மவர்க்கு ஏன் இக்கதி ஐயா!
ஏசுவே எம்மைக் கைவிட்டீரோ என்ற நியதி
ஏராளமான உள்ளங்கள் இவ்வுலகை விட்டு போனார்கள் ஐயா!

பாசங்கள் நேசங்கள் பரிதவித்து போனதையா!
பார்த்த கண்கள் குணமாகி கதறியதையா!
பார்போற்றும் தேவனே! பரிதவிக்க விட்டீரோ ஐயா!
பார்த்து பார்த்து கண்கள் குருடாகிப் போனதையா!

உன்னத தேவனே! ஊசாலாடுகின்றன உயிர்களெல்லாம்
உருகுதையா உள்ளம் வேதனையால் வருந்துதையா
உயிரோடு இருந்தவர்கள் உயிரிழந்து போனார்கள் ஐயா!
உத்தானமும் ஜீவனுமான உன்னைத் தேடி
உம் சந்நிதி வந்தார்கள் ஐயா!

காக்கும் கரங்களுடன் கருணையுடன் வாழ்பவரே!
காணக்கூடாதெல்லாம் கண்கள் கண்டுவிட்டதையா
காண்பது கனவோ, நினைவோ கர்த்தரே காப்பாற்றும் ஐயா!
காட்டுமிராண்டித்தனமாய் செயற்பட்டவர்களை கருணையுடன்
மன்னியும் ஐயா!

வாழவேண்டியவர்கள் வாழ்வை இழந்துவிட்டனர் ஐயா!
வாருமையா எந்நிலை பாருமையா பதைக்கிறது எம் நெஞ்சமையா!
வாடிப்போனதையா, வையகமே அழுகுதையா!
வாரும் ஆண்டவரே! எம் நிலை பாருமையா பரிவுடன்
கண்ணோக்குமையா!

தந்தையே இறைவா உம் தரணியைப் பாருமையா!
தயைகூர்ந்து இரங்கி தாசர்கள் எம்மை கைவிடாதேயும் ஐயா!
தட்டுத்தடுமாறி தயக்கத்துடன் வாழுதையா
நீர் படைத்த மக்கள் ஐயா!
தரணியைக் காக்க வேண்டுமென தாழ்ப்பணிந்தோம் உன்
பாதமையா!

மனிதனே மனிதனை அழிக்கும் நிலை பாருமையா!
மன்னியும் தேவனே! இக்கல் மனம் படைத்தவர்களை
மண்டியிட்டு வேண்டினோம் ஐயா! மன்னித்து மனம் மாற்றுமையா!
மக்களெல்லோரும் ஒன்றித்து வாழ உம் ஆசி அருளுமையா!

குவலயம் குழப்பியதையா குண்டு வெடிப்பின் தாக்கத்தினால்
குருதி சிந்திய குடும்பங்கள் இவ்வுலகை விட்டு போனதையா!
குற்றியிராய் ஆனவர்கள் ஆறுதலற்று அழுகின்றனர் ஐயா!
குருவே! நீர் வாருமையா வாழ்வை வாழவைக்க
அருள் தாருமையா!

அன்பனே! ஆண்டவனே! அடியவர்களை அணையுமையா!
அல்லலுறும் மக்களை தேற்ற அன்னையாய் வாருமையா!
அடைக்கலம் தாருமையா! ஆறுதலலிக்க வாருமையா!
அவதியுறும் உம் பிள்ளைகளைக் காக்க அண்டி வாருமையா!

யாரிடம் நாம் செல்வோமையா, தந்தையாய் எம்மைத் தேற்ற
வாருமையா!
யார் வந்தாலும் உம்மைப் போல் யாருமில்லையே ஐயா!
யார் தான் எம்மைத் தேற்றுவார் ஐயா!
தாய்க்கு தாயாய், தந்தைக்கு தந்தையாய் நீர் இருக்க!
யாவும் இழந்து பரிதவிக்கும் உம் பிள்ளைகளை
கருணையுடன் கண்ணோக்கி பாருமையா!





எந்தையே இறைவா! எம்மவர் நிலையைக் கண்ணோக்கி பாருமையா!
எந்நாளும் நாமுந்தன் பிள்ளைகள் ஐயா! எங்களைக் காக்க இறைஞ்சுகின்றோம் ஐயா!
எப்போதும் எம்மவர் வாழ்வு ஈசன் உன்பாதம் ஐயா!
எம்மைவிட்டு எந்நாளும் பிரியவேண்டாம் எம் இறைவா!

ஆண்டவனே! அடியோர் உம்பாதம் பணிந்தோம் ஐயா!
ஆசீர்வாதம் தந்து அவனியைக் காருமையா!
ஆவலுடன் காத்திருந்தோம் அடியவர்கள் உன் பிள்ளைகள் நாமையா!
ஆறுதல் அளித்து உம் ஆசி வழங்கி பாதுகாத்து பராமரித்தருளும் ஐயா!

f t

**ஆக்கம் : அருட்சகோதரி. டெலா றோஸ் அ.கா**

# 19 தியோக்கோன்களை திருநிலைப்படுத்தும் திருத்தந்தை



இறையழைத்தலுக்காகச் செபிக்கும் 56வது உலக நாளாகிய, வைகாசி 12, ஞாயிறு காலை 9.15 மணிக்கு, வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவேற்றும் திருப்பலியில், 19 தியோக்கோன்களை அருள்பணியாளர்களாகத் திருநிலைப்படுத்துகிறார். பாஸ்காகால நான்காம் ஞாயிறாகிய, நல்லாயன் ஞாயிறன்று, திருத்தந்தை ஒவ்வோர் ஆண்டும், தியோக்கோன்களை, அருள்பணியாளர்களாகத் திருநிலைப்படுத்துகின்றனர்.

அவர் மேலும் கூறுகையில், பணிவிடை பெறுவதற்கல்ல, மாறாக, பணிவிடைபுரியவே வந்தேன் என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவில் கொண்டவர்களாக, காணாமல்போன ஆட்டைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட அனுப்பப்பட்டுள்ளீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் என கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இறைத்தந்தையைப்போல், அருள்பணியாளர்களும், இரக்கமுள்ளவர்களாகச் செயல்படவேண்டும் என அழைப்பு விடுத்தார். நீங்கள் இலவசமாகப் பெற்ற அனைத்தையும் இலவசமாகவே வழங்குங்கள் என்று கூறிய இயேசுவின் குரலுக்கு செவிசாய்த்தவர்களாகவும், ஆயர்களுடனும், உடன் அருள்பணியாளர்களுடனும், இறைமக்களுடனும் செபத்தில் ஒன்றித்திருப்பவர்களாகவும் வாழ அருள்பணியாளர் அழைப்பு பெற்றிருப்பதை எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

புனிதத் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள், 1963ம் ஆண்டு இறையழைத்தலுக்காகச் செபிக்கும் உலகநாளை உருவாக்கியதைத் தொடர்ந்து, உயிர்ப்புக்காலத்தின் நான்காம் ஞாயிறாகிய, நல்லாயன் ஞாயிறன்று, ஒவ்வோர் ஆண்டும், தியோக்கோன்களை, அருள்பணியாளர்களாக இந்நாளில் திருநிலைப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் திருத்தந்தை.

# அன்னையர் தினத்திற்கு திருத்தந்தை வாழ்த்து

உலகின் பல்வேறு நாடுகளில் அன்னை தினம் 12, ஞாயிறன்று சிறப்பிக்கப்பட்டதையொட்டி, அனைத்து அன்னையர்களுக்கும் ஞாயிறு அல்லேலூயா வாழ்த்தொலியுரையின்போது தன் வாழ்த்துக்களை வெளியிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ். ஞாயிறு அல்லேலூயா வாழ்த்தொலி உரையை வழங்கி செபித்தபின், அன்னை தினம் குறித்து எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குழந்தைகளை வளர்த்தெடுப்பதில், விலைமதிப்பிட முடியாதவகையில் சேவையாற்றும், மற்றும், குடும்ப மதிப்பீடுகளை பாதுகாக்கும் அன்னையருக்கு நாம் கரவொலி எழுப்பி, நன்றியையும் பாராட்டுக்களையும் வெளியிடுவோம் என்று கூறியதுடன், விண்ணகத்திலிருந்தும் நம்மை கண்காணித்துக்கொண்டு நமக்காக செபித்துக் கொண்டிருக்கும் அன்னையரையும் மறவாதிருப்போம், என்றார்.



வானகத்திலிருக்கும் நம் அன்னை மரியாவை நோக்கியும் நம் எண்ணங்கள் செல்கின்றன, என உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வைகாசி மாதம் 13ம் திகதி சிறப்பிக்கப்படும் பாத்திமா அன்னை மரியா பற்றியும் நினைவூட்டினார். நம் பாதையில் நாம் மகிழ்வுடனும் தாராளமனதுடனும் தொடர்ந்து நடைபோட, அன்னை மரியாவின் கரங்களில் நம்மை முற்றிலுமாக ஒப்படைப்போம் என மேலும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# பாலியல் கொடுமையைக் களைய, திருத்தந்தையின் திருத்தூது மடல்



"நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது" (மத். 5:14) இச்சொற்கள் வழியே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, நம்பிக்கை கொண்டோர் ஒவ்வொருவரையும், புனிதத்தின் ஒளிர்விடும் எடுத்துக்காட்டுகளாக வாழும்படி அழைத்துள்ளார் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வைகாசி 9, வியாழனன்று வெளியிட்டுள்ள ஒரு திருத்தூது மடலின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'Vos estis lux mundi' அதாவது, "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" என்ற தலைப்பில், திருத்தந்தை, தன் சுய விருப்பமான, "Motu Proprio" வடிவில் உருவாக்கியுள்ள திருத்தூது மடல், பாலியல் கொடுமைகளை திருஅவையிலிருந்து நீக்கும் முயற்சிகளை தெளிவுபடுத்த வெளியிடப்பட்டுள்ளது.

### ஆழமான மனமாற்றம் தேவை

பாலியல் கொடுமைகள் இனி ஒருபோதும் நிகழாமல் இருப்பதற்கு, தொடர்ந்து, ஆழமான மனமாற்றமும், அதனை உறுதி செய்யும் வழிமுறைகளும் தேவைப்படுகின்றன என்றும், இதற்கு, ஒவ்வொருவரும் இணைந்து முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் திருத்தந்தை, இம்மடலின் அறிமுகப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய ஒரு முயற்சி, தூய ஆவியார், நம் உள்ளங்களில் பொழியப்படுவதால் மட்டுமே உறுதி செய்யப்படும், என்பதையும், "என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது" (யோவான் 15:5) என்று இயேசு கூறியள்ளதையும் நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும் என்று திருத்தந்தை நினைவுறுத்தியுள்ளார்.

### ஆயர்களின் கூடுதல் பொறுப்பு

பாலியல் கொடுமையைக் களையும் பெரும் பொறுப்பு, திருத்தூதர்களின் வழித்தோன்றல்களான ஆயர்களையே பெரிதும் சாரும் என்பதை வலியுறுத்திக் கூற, இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் 'Lumen Gentium' திருஅவைக் கோட்பாட்டின் 27ம் எண்ணை, ஒரு மேற்கோளாகக் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். இந்த அறிமுகப் பகுதியைத் தொடர்ந்து, பொதுவான விதிமுறைகள், (General Provisions) மற்றும், ஆயர்களுக்கும் அவர்களுக்கு இணையானவர்களுக்கும் உரித்தான விதிமுறைகள் (Provisions concerning Bishops and their equivalents) என்ற இரு பிரிவுகளில் 19 விதிகளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

### பொதுவான விதிமுறைகள்

தான் வெளியிடும் விதிமுறைகள், அருள்பணியாளர்கள் மற்றும் அர்ப்பண வாழ்வில் ஈடுபட்டோருக்கு விதிக்கப்படுகின்றன என்பதை, முதல் விதிமுறையில் கூறும் திருத்தந்தை, 18 வயதுக்கு கீழ் உள்ளவர்கள், மற்றும், உடலளவிலும், மனதளவிலும் முடிவுகள் எடுக்க இயலாத நலிவுற்றோர் ஆகியோருக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் கொடுமைகளையும், குழந்தைகளை வைத்து உருவாக்கப்படும் ஆபாசப் படங்கள், காணொளிகளையும் இந்த விதிமுறைகள் உள்ளடக்கியுள்ளன என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், தங்கள் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, அருள்பணி பயிற்சியில் அல்லது துறவு வாழ்வின் பயிற்சியில் இருப்போரை, பாலியல் வழியில் கொடுமைப்படுத்துவதும் இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, எவ்வழிகளில் புகார் அளிப்பது, புகார் அளிப்பவரின் அடையாளத்தை எவ்வாறு பாதுகாப்பது, மற்றும், இக்கொடுமைகளால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படவேண்டிய பராமரிப்பு ஆகியவை குறித்து முதல் பிரிவில் 5 விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 15ம் பக்கம்..







"புனித செபமாலையின் கன்னியே, நாங்கள் ஒரே இதயமும், ஆன்மாவும் கொண்டவர்களாய், விண்ணக இல்லத்தை நோக்கி பயணிக்கும் புனித மக்களாய் இருக்க உதவியருளும்"

"மற்றவர்களை நம் சகோதரர்களாக, சகோதரிகளாகக் கண்ணோக்கி, அவர்களை அன்பு செய்து, அவர்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு, நம்பிக்கை நம்மை அழைத்துச் செல்லவேண்டும்"

"நாசரேத்தின் பணிவான தொழிலாளரான புனித யோசேப்பு, நம்மை கிறிஸ்துவை நோக்கி வழிநடத்துவாராக, நன்மை செய்வோரின் தியாகத்திற்கு ஆதரவு வழங்குவாராக, தங்கள் வேலையை இழந்தோர், மற்றும், வேலை தேடுவோருக்கு பரிந்துரை செய்வாராக"

"நீ கடவுளைத் தேடவில்லையெனினும், கடவுள் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறார். நீ கடவுளை மறந்துவிட்டாலும், அவர் இன்னும் உன்னை அன்பு கூர்ந்து கொண்டிருக்கிறார். உன்னுடைய திறமைகளையெல்லாம் பயனற்ற முறையில் வீணாக்கிவிட்டதாக நீ எண்ணினாலும், உனக்குள் அழகைத் தேடுகிறார் இறைவன்"

"நம் இதயங்களை இரக்கத்திற்கெனத் திறந்து, ஒரு சகோதரத்துவ அரவணைப்புடன் மன்னிப்பின் முத்திரையை அங்கு பதிக்கும்போது, தீமையை நன்மையால் வெற்றிகொள்ளமுடியும் என்பதை, நம்மால் உலகிற்கு பறைசாற்ற முடியும்".

"பாத்திமாவின் அன்னை மரியாவே, நாங்கள் ஒவ்வொருவரும் உம் கண்களில் விலையேறப் பெற்றவர்கள், மற்றும், எங்கள் இதயங்களில் இருக்கும் எதுவும் உம்மை மனம் நோகச் செய்யாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். உம் அரவணைப்போடு எம் வாழ்வைப் பாதுகாத்து, புனிதத்துவத்தின் பாதையில் எம்மை வழி நடத்தியருளும்"

"இறைவனையும் நம் சகோதர சகோதரிகளையும், இவ்வுலகம் முழுமையையும் அன்புகூரவும், இந்த அன்பில் உண்மையான மகிழ்வைக் கண்டுகொள்ளவும், உதவும் தன் திட்டத்தை, இறைவன் நம்மிலும் தன் படைப்பு முழுவதிலும் வைத்துள்ளார்"

"நம் துவக்க காலத்திலிருந்தே இறைவன் நமக்கென வடித்துள்ள அன்பின் திட்டத்தை கண்டுகொள்ளவும், அதை துணிச்சலுடன் ஏற்று நடைபோடவும் உதவவேண்டும் என, இறையழைத்தலுக்காக செபிக்கும் இந்த உலக நாளன்று, செபத்தில் ஒன்றிப்போம்"

"இது இரக்கத்தின் காலம் இது, ஆண்டவரின் பரிவன்பின் காலம், எனவே, அவர் நம்மிடம் வருவதற்கு நம் இதயங்களைத் திறந்து வைப்போம்"



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

(மத் 6:9)

# நல்ல மனநிலையால் வேண்டுவோம்

பகுதி – 18

செபம் என்பதே அடிப்படையில் நம் மனநிலையின் வெளிப்பாடுதான் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். எனவேதான் நீங்கள் எத்தகைய மனநிலையில் கேட்கிறீர்கள் என்பது பற்றிக் கவனமாயிருங்கள் (லூக் 8:18) என்றார் இயேசு. நல்ல மனநிலையோடு ஏறெடுக்கப்படாத இறை-வேண்டல் இறைவனால் புறக்கணிக்கப்படும் என்பதை பரிசேயரும் வரி தண்டுபவரும் பற்றிய உவமையில் (லூக் 18:9-14) இயேசு எடுத்துச் சொன்னார்.

இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகு தொலைவில் இருக்கிறது (மத் 15:8) என்ற எசாயாவின் மேற்கோள் வழியாக நல்ல மனநிலையில்லாத புகழ்ச்சியின் பயனற்ற தன்மையை எடுத்துரைத்து நம்மை எச்சரிக்கின்றார்.

அதுபோல, உறவின் மனநிலை இல்லாத பலியோ, காணிக்கையோ இறைவனுக்கு ஏற்புடையது அல்ல (மத் 5:23-24) என்பதையும் வலியுறுத்திச் சொன்னார் இயேசு. மனிதரைத் தீட்டுப்படுத்துவது உணவல்ல, மாறாக, தீய எண்ணங்கள உள்ளத்திலிருந்து வெளிவருகின்றன. இவையே மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன (மத் 15:20) என்றும் தெளிவுபடுத்தினார். இவையெல்லாம், ஒருவரின் மனநிலை அவரது சொற்களைவிட, செயல்களைவிட அதிக வலிமையானது என்பதையும், நல்ல மனநிலையில்லாமல் செய்யும் செபங்கள், செயல்கள் பயன் தரா என்பதையும் எடுத்துரைக்கின்றன.

மனநிலை பற்றிய இன்னும் சில கருத்துகளை இறைமொழி நமக்குத் தருகின்றது. திருமுழுக்கு யோவானுடைய பணிகளைப் பற்றி முன்னுரைக்கரையில் அவர் இறைவாக்கினர் எலியா போன்று பணியாற்றுவார், நேர்மையாளர்களின் மனநிலையைக் கீழ்ப்படியாதவர்கள் பெறச் செய்வார், இவ்வாறு, ஆண்டவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை ஆயத்தம் செய்வார் (லூக் 1:17) என்கிறார் வானதூதர். ஆண்டவருக்கேற்ற மக்கள் நேர்மையான மனநிலையைக் கொண்டிருப்பர் என்பது இதன் செய்தி. நேர்மனநிலை, எதிர்மனநிலை என்று உளவி-யலார் சொல்வதுபோல், ஊனியல் மனநிலை, ஆவிக்குரிய மனநிலை என்று பகுத்துச் சொல்கிறார் புனித பவுல். ஊனியல் மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது சாவே. ஆவிக்குரிய மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது வாழ்வும் அமைதியும் ஆகும் (உரோ 8:6). எனவே, நாம் ஆவிக்குரிய மனநிலை கொள்ள அழைப்பு விடுக்கிறார்.

மேலும், கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும் (பிலி 2:5) என்றும் அறிவுறுத்துகிறார். இயேசுவிடம் இருந்த மனநிலை வேறு ஒன்றுமில்லை, சாவு மட்டும் தந்தைக்குப் பணிந்திருக்க வேண்டும் என்பதே இயேசுவின் மனநிலை (பிலி 2:6-11). நம் வாழ்வில் பலவிதமான மனநிலைகள் இருக்கின்றன. விவிலியம் காட்டும் சில நல்ல மனநிலைகளைப் பார்ப்போம்.

### 1. இறைவனைப் பற்றிய மனநிலை :

இறைவனே நம் வாழ்வின் முதல்வர் மற்றும் அனைத்தும் என்பதை ஏற்று அவரையே முதன்மையாகவும், முழுதாகவும் அன்பு செய்யவேண்டும். உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும், முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக (மாற் 12:30). மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிட, கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்? (தி.ப 5:29)

### 2. இறைவேண்டல், நம்பிக்கை பற்றிய மனநிலை:

பிற இனத்தவரைப் போலப் பிதற்றவேண்டாம். நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார் (மத் 6:8). நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி, கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை (எபி 11:1) கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர் (லூக் 11:10)

### 3. உலகம் பற்றிய மனநிலை :

கடவுள் உலகை நல்லதென்று கண்டார் (தொ.நூ 1:31) தம் ஒரே மகனையே அளிக்கும் அளவுக்கு உலகை அன்பு செய்தார் (யோவா 3:16) நாமும் அவ்வாறே பார்ப்போம்.

### 4. மனிதர்கள் பற்றிய மனநிலை :

ஒருவருக்கொருவர் நன்மைசெய்து பரிவுகாட்டுங்கள் (எபே 4:32) மனத் தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவர்களாகக் கருதுங்கள் (பிலி 2:3).

### 5. நம்மைப் பற்றிய மனநிலை :

இறைவன் நமது தந்தை, எனவே, நாம் பேறுபெற்றவர்கள். கடவுளின் உள்ளங்கைகளில் நாம் பொறிக்கப்பட்டுள்ளோம் (எசா 49:16). ஆண்டவர் பார்வையில் நான் மதிப்புப் பெற்றவன் (எசா 49:5). இப்போது நான் இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால்தான் (1கொரி 15:10).

### 6. துன்பம் பற்றிய மனநிலை :

துன்பத்தின் வழியாகவும் நன்மையும், வெற்றியும் பிறக்கும் என்பதே இயேசுவின் சிலுவைச் சாவு நமக்குக் கற்றுத் தரும் பாடம். எனவே, துன்பத்தை நேர்மறையாகப் பார்க்க அழைக்கிறது இறைமொழி. கிறிஸ்து தம் ஊனுடலில் துன்புற்றார். அப்பொழுது அவர் கொண்டிருந்த மனநிலையை நீங்களும் படைக்கலமாகப் பூண்டு கொள்ளுங்கள். ஊனுடலில் துன்புறுவோர் பாவத்தை விட்டு விடுகின்றனர். (1பேது 4:1)

### 7. செல்வம் பற்றிய மனநிலை :

எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்யமுடியாது. நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது (மத் 6:24). பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளதே போதும் என்றிருங்கள் (எபி 13:5).

### 8. பணி பற்றிய மனநிலை :

நீங்கள் செய்கின்ற அனைத்து வேலைகளையும் மனிதருக்காக அல்ல, ஆண்டவருக்காகவே செய்கிறீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள் (கொலோ 3:23).

### 10. பாலியல் இன்பம் பற்றிய மனநிலை :

செயலை விட மனநிலை, கண்ணோட்டமே முதன்மையானது என்பதற்கு இயேசுவின் இந்தக் கடுமையான சொற்கள் ஒளியூட்டுகின்றன. ஒரு பெண்ணை இச்சசையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று (மத் 5:28).

### 11. நம்பிக்கை மனநிலை :

நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை (2 கொரி 4:8). உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள். ஏனென்றால், அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார் (1பேது 5:7)

### 12. வாழ்வு பற்றிய மனநிலை :

அனைத்தும் உங்கள் நன்மைக்கே நிகழ்கின்றன (2கொரி 4:15). எனவே, எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள் (1தெச 5:16-18).

இவை போன்று இன்னும் பல நல்மனநிலைகள் விவிலியத்தில் உள்ளன. நம் மனநிலைகளை ஆய்வுசெய்து தூய்மைப்படுத்துவோம். நல்ல மனநிலையே நல்ல செபம் என்பதை உணர்வோம். தூய்மையான உள்ளம், நல்ல மனச்சான்று, வெளிடேமற்ற விசுவாசம் ஆகியவற்றினின்று அன்பைத் தூண்டுவதே நான் கொடுத்த கட்டளையின் நோக்கம் (1 திமொ 1:5) என்னும் இறைமொழியின்படி வாழ்வோம். **தொடரும்**

## உம்மால் எப்படி அம்மா...?

**நினைத்து வந்தால் உள்ளத்தில் வருகிறீர்களே....**
**நினையாவிட்டாலும் உள்ளம் நிறைக்கிறீர்களே...**
**மனதில் நினைத்த வேளை**
**அமைதி தருகிறீர்களே...**
**மனம் அலை பாயும் போது**
**காத்துக் கொள்கிறீர்களே...**
**தவிக்கும் வேளை தஞ்சம் தருகிறீர்களே...**
**யாத்திரையில் வலிக்க நேர்ந்தாலும்**
**கூட வருகிறீர்களே...**
**எத்தனை துன்பத்திலும், அத்தனை**
**துணையாகிறீர்களே...**
**பகலில் தாங்கவும், இரவில் தூங்கவும்**
**உதவுகிறீர்களே...**
**செபித்தாலும், செபிக்க மறந்தாலும்**
**எம்மை நேசிக்கிறீர்களே...**
அம்மா
உம்மை நான் மறவேனே...
உம்மிடம் வர முயல்வேனே...
உம்மை போல வாழ நினைப்பேனே...

02 பாதிக்கப்பட்ட முஸ்லீம்...

காரணம் பிரபல்யமாகவே என்கின்றனர். நான் செய்திகளை மற்ற மதத்தலைவர்களுடன் கலந்துரையாடியே வழங்குகிறேன். எனக்கு எந்த அரசியல் தலைவர்களும் இல்லை. எனது ஒரே தலைவர் இயேசு கிறிஸ்துநாதர் மாத்திரமே.

நீர்கொழும்பில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களைச் சந்தித்தேன். அவர்கள் பயத்துடன் அழத் தொடங்கினார்கள். முஸ்லிம் மக்கள் இத்தாக்குதலை மேற்கொள்ளவில்லை என்பதற்கான தெளிவான காரணங்கள் என்னிடம் உண்டு.

அவர் முஸ்லிம்மக்களிடம், நீங்கள் பயப்பட வேண்டாம். பேராயராக நான் இருக்கும் வரை எமது மக்களால் உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது.

# இயேசு – அன்னை மரியாவின் திருவுருவங்கள் செந்நீரும் கண்ணீரும் வடிக்கின்றன

இம்மாதப் புனிதர்

பெண்ணுக்கும் அரக்கப் பாம்புக்கும்போர்

திருத்தந்தை புனித ஆண்டில் மே 13ம் நாளை பாத்திமா அன்னையின் திருநாளாக பிரகடனம் செய்தார். பாத்திமா அன்னை அருளிய இரகசியங்களின் முக்கியத்துவத்தை திருச்சபை புரிந்து கொண்டு எதிர்வரும் விசுவாசப் போராட்டம் துன்பங்களை துய ஆவியாரின் ஆற்றலோடும் வல்லமையோடும் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தத் திருநாள் ஏற்படுத்தப்பட்டது.

மே 13ம் திகதி 2000ம் ஆண்டு அன்று திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் பால் பாத்திமா காட்சிகள் அருளப்பட்ட குழந்தைகள் பிரான்சிஸ்கோ, ஜெசிந்தாவுக்கு இறை ஊழியர்கள் என்ற பட்டம் அளித்தபோது

**சிவந்த அரக்கப் பாம்பின் வாலுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் அது உண்மையிலேயே மூன்றில் ஒரு பகுதி விண்மீன்களை கீழே இழுத்துப்போடுகிறது**

(திவெ 12:4) என எச்சரித்தார். ஏற்கனவே 1967ல் இதே இறைவார்த்தைகளை மேற்கோள்காட்டி திருத்தந்தை 6ம் பால் ‘2000 ஆண்டுகளுக்கு முன் திருத்தூதர் புனித யோவானுக்கு வானில் தோன்றிய பெண் (திவெ 12) **பாத்திமா அன்னைதான்** என்று சுட்டிக்காட்டினார். 2005ம் ஆண்டு லூசியாவும் (97ல்) திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல் அவர்களும் மரித்து விண்ணகம் சேர்ந்தனர்.

இரண்டாம் இரகசியத்தின் தொடக்கத்தில் அன்னை வெளிப்படுத்தியவாறு

**மானிடர் மீட்புக்காக இயேசு சிந்திய இரத்தம் வீணாகி ஏராளமான ஆன்மாக்கள் நரகம் செல்கின்றன**

நம் மேலுள்ள அக்கறை அளவு கடந்ததாய் அன்பினால் நம்மை மீட்க விண்ணக இரகசியங்களை முன்கூட்டியே நம்மைத் தேடி வந்து அன்னை அறிவித்திருந்தும் முழுப் பயனில்லாமல் போகும் நிலை தொடர்கிறது.

உலகெங்கும் இறுதி கால அடையாளங்களாக இயேசு மற்றும் அன்னை மரியாவின் திருவுருவ சுரூபங்கள் செந்நீரும் கண்ணீரும் வடித்துக் கொண்டிருக்கின்றன. மனித சமுதாயம் விசுவாச வாழ்வை தொலைத்துவிட்டு உலகப் போக்கில் வாழ்வதால் தண்டனைகள் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இதைக் கண்டு பிடிப்போர், தயாரிப்புடன் இறை நம்பிக்கையில் நிலைத்திருப்போர் பேறுபெற்றோர்.

**வானதூதர் பரிகாரம், பரிகாரம், பரிகாரம் என உரக்கக் கத்தி நம்மை பரிகாரம் செய்ய கட்டளை இடுகிறார்**

**முதல் பரிகாரமாக: நம் பாவ இயல்பை முழுமையாக மாற்றிக்கொண்டு பாவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாவங்களை தூண்டும் சூழ்நிலைகள், நபர்கள், சிந்தனைகள், வெளியீடுகள், திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், சமூக தொலைத்தொடர்புகள், வலைத்தளங்கள், மது போதைப் பொருள்களை அறவே தவிர்க்க வேண்டும்**

உலகின் பாவங்களுக்காக பரிகாரம், தியாகம், செபம், ஒறுத்தல் செய்ய வேண்டும்.

ஞானமேய்ப்பர்கள் துய்மை உள்ளவர்களாகவும், குடும்பங்களில் தாய்-தந்தை பிள்ளைகள் நல்ல கிறிஸ்தவர்களாகவும், பணியிடங்களில் நல்ல அதிகாரி, பணியாளராகவும் மற்றும் அனைவரும் நீதி நேர்மை, நன்மை உண்மை, அன்பு, இரக்கம், பணிவு, பகிர்வு, கடமை உணர்வுடன் செயல்பட வேண்டும்.

**இரண்டாவது பரிகாரமாக: அதிகம் செபிக்க வேண்டும். இன்றையக் காலக்கட்டத்தில் இறையச்சம், இறை நம்பிக்கை இல்லாமல் போனதற்கு காரணம் செபவாழ்வில் ஏற்பட்ட பெரிய வீழ்ச்சிதான்**

முக்கியமாக செபமாலை செபிக்க வேண்டும். செபமாலை பேருண்மைகளை உள்ளத்தில் பதித்து ஆழ்ந்து தியானித்துக் கொண்டே வாய்செபமாக செபமாலையின் செபங்களை செபித்தால்தான் திருப்பலிக்கு அடுத்த நிலையில் வல்லமை வாய்ந்த செபமாக செபமாலை மாறுகிறது. தகுதியுடன் திருவருட்சாதனங்கள் பெற்று கடவுளை நோக்கி நம்வாழ்வு முழுமையாகத் திரும்ப வேண்டும்.

பக்தியுடன் அன்னையின் ஆடையான உத்தரியம் அணிந்து உத்தரிய பக்தியைக் கடைப்பிடித்து அன்னையின் மாசற்ற இருதயத்துக்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

**ஒளிவின்றி எல்லாப் பாவங்களையும் அறிக்கையிட்டு உண்மையான மனவருத்தத்துடன் ஒப்புரவு அருட்சாதனத்தால் மன்னிப்புப் பெறவேண்டும்**

பாவ வாழ்விலிருந்து இறையருளால் விடுதலைப் பெற்று தூய ஆவியுடன் கூடிய அருள் வாழ்வை சுவைக்க வேண்டும். அதே பாவங்களில் விழாமல் மாசற்ற அன்னையின் பிள்ளைகளாக வாழவேண்டும்.

**மூன்றாவது பரிகாரமாக இறை ஊழியம் செய்ய வேண்டும். நற்செய்தியை போதித்தும் இறையரசின் மதிப்பீடுகளுடன் வாழ்ந்தும் காட்ட வேண்டும். இரக்கச் செயல்கள் வாழ்வாக வேண்டும்**



விசுவாசப் போராட்டத்தில் ஆன்மாவைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

**தகுதியுடன் திருவருட் சாதனங்கள் பெற்று கடவுளை நோக்கி நம்வாழ்வு முழுமையாகத் திரும்ப வேண்டும்**

# தூய கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்தல்!

வைகாசி 31

இரு மனிதர் ஒருவரையொருவர் நேருக்கு நேர் கண்டுக்கொள்வது சந்திப்பு எனப்படுகிறது. இந்த சந்திப்பு பலவகையாகும்.

- நீண்ட காலத்திற்குப் பின் எதிர்பாராத விதமாக இருவர் ஒருவரையொருவர் நேரில் காண்பது சந்திப்பாகும்
- திட்டமிட்டு அதாவது நாள், நேரம், இடம் போன்றவற்றை முன்கூட்டியே நிர்ணயித்து கூடுவதும் சந்திப்பாகும்.
- இரு தனிப்பட்ட மனிதரோ, இரு குழுவினரோ சந்திக்கும்போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்படும். ஒப்பந்தம் செய்யப்படலாம். முடிவு எடுக்கப்படலாம்,

இத்தகைய சந்திப்பினால் மாற்றங்களும், தாக்கங்களும் ஏற்படலாம். இன்று நாம் கொண்டாடும் விழா ஒரு முக்கியமான வரலாற்றுச் சந்திப்பாகும். கன்னிமரியாளிடம், வானதூதர் கிறிஸ்து பிறப்பைப் பற்றி அறிவித்ததும், சில நாட்களுக்குள் யூதேயா நாட்டில் வாழ்ந்த தம் உறவினரான எலிசபெத்திடம் மரியா சென்றார். இருவரும் சந்திக்கின்றனர். அதே நேரத்தில் ஆண்டவரை உதரத்தில் அன்னையால் தாங்கியிருந்த இயேசுவும், திருமுழுக்கு யோவானும் சந்தித்துக்கொண்டார்கள்.
திருத்தந்தை 6ம் யோன் இத்திருநாளை வைகாசி 31ம் திகதியில் கொண்டாடும்படி பணித்தார்.

**இவ்விழா உணர்த்தும் உண்மைகள்**

விவிலியத்தில் எத்தனையோ சந்திப்புக்களைப் பற்றி வாசித்திருக்கிறோம். ஏன் கன்னிமரியாள் எலிசபெத்தைச் சந்தித்ததை மட்டும் நாம் விழாவாகக் கொண்டாடுகிறோம்.

இந்த சந்திப்பு ஒரு சாதாரண சந்திப்பு அல்ல, முக்கியமானதொன்றாகும்.
இது ஒரு மீட்பின் சந்திப்பு. மரியா தனியாக எலிசபெத்தைச் சந்திக்கச் செல்லவில்லை. தன் உதரத்தில் தாங்கியிருந்த இயேசுவையும் தன்னோடு எடுத்துச் செல்கிறார். மரியாவின் உதரத்திலிருந்த இயேசுவின் பிரசன்னம் மரியாவுக்கு மட்டுமல்ல; எலிசபெத்துக்கும், அவருடைய வயிற்றிலிருந்த திருமுழுக்கு யோவானுக்கும் மகிழ்ச்சியளித்தது.

**எலிசபெத்தை சந்திக்க சென்ற கன்னிமரியா இயேசுவை தாங்கிய புதிய உடன்படிக்கையின் பேழையாகத் திகழ்ந்தார். இதனால் இவர் உடன்படிக்கையின் பெட்டகம் என்றழைக்கப்படுகிறார்**

இப்பொழுது கன்னி மரியா ஒரு உடன்படிக்கையின் பேழையாகி இயேசுவை தன் உதரத்தில் தாங்கிக்கொண்டு அதன் வழியாக இறைப்பிரசன்னத்தை எலிசபெத்துக்கும் அவர் வயிற்றிலிருந்த திருமுழுக்கு யோவானுக்கும் எடுத்துச் செல்கிறார். செக்கரியாவின் வீட்டை அடைந்ததும் எலிசபெத்தை வாழ்த்துகிறார், மரியாவின் வாழ்த்தைக் கேட்டதும், எலிசபெத்தின் வயிற்றிலிருந்தக் குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது. திருமுழுக்கு யோவான் தன் தாயின் வயிற்றிலிருந்தபோது மீட்படைகிறார். பிறப்பு வழி பாவத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார். இதனால்தான் அவரது மண்ணகப் பிறப்பே விழாவாக் கொண்டாடுப்படுகிறது.
மரியா எலிசபெத்தைச் சந்திக்க சென்றதும் ஒரு சேவை ஆகும். வயதான நிலையில் எலிசபெத் கருவுற்றிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும்அவருக்கு உதவி தேவையாயிருக்கும் என உணர்ந்து உதவி செய்ய மரியா விரைந்து செல்கிறதார்.

**பணிவிடை பெற அன்று, பணிவிடை புரியவே வந்தேன்**

## 01 இலங்கை கத்தோலிக்க...

பாதுகாப்பு உறுதிப்படாவிடின் அவர்கள் மத்தியில் இயல்பு நிலை ஏற்படாது. எமது இக்கூட்டத்தொடரின் போது நாட்டின் எல்லாத் தலைவர்களையும் சந்தித்து எமது சமூகத்தை கவ்வியுள்ள பயபீதி உணர்வை போக்குவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளோம். மதம், சாதி, நிறம் என்பவற்றைக் கடந்து முழு நாட்டிற்கும் ஒரே ஒரு சட்டக்கோவையே இருக்கவேண்டும். உண்மையையும் நீதியையும் மீட்டெடுக்கும் போது தான் மக்கள் உண்மையான அமைதியையும், சுதந்திரத்தையும் அனுபவிப்பார்கள். அரசியல் வேறுபாடுகளையும் சுயநலன்களையும் மறந்து எம் மக்களையும் நாட்டையும் பற்றிச் சிந்திக்க வேண்டிய நேரம் இதுவாகும். இருள் சூழ்ந்த எம் தேசத்தின் இந்நிலையில் துன்பப்படும் மக்களுக்காகவும், எம் நாட்டிற்காகவும் நல்மனம் கொண்ட எல்லோரையும் இறைவனிடம் மன்றாடுமாறு வேண்டிநிற்கின்றோம். நமது பிரியமான தேசத்தில் நல்லிணக்கம், அமைதி மற்றும் ஒற்றுமைக்கான வழி பிறக்க சக மதத்தலைவர்களுடன் நாம் கைகோர்த்து நீதிவேண்டியுள்ளோம். **"இறைவன் எம் தாய்நாட்டை ஆசீர்வதிப்பாராக"**

## 01 இலங்கை குறித்து...

பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகத்தினருடன் இதயபூர்வமாக நெருக்கமாக இருப்பதை வெளிப்படுத்த விரும்புவதாக புனித பேதுரு சதுக்கத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தையொட்டி தன்னால் ஆற்றப்பட்ட ஊர்த் எட் ஓர்பி (நகருக்கும், உலகிற்கும்) உரையில் திருத்தந்தை தெரிவித்தார். இலங்கை எங்குமுள்ள தேவாலயங்களிலும், ஹோட்டல்களிலும் இடம்பெற்ற பல தாக்குதல்களால் கடும் துயரமும், வேதனையும் அடைவதாக திருத்தந்தை கூறினார். இந்தத் தாக்குதல் சம்பவங்களில் துன்பகரமாக மரணத்தை தழுவிய அனைவரையும் தான் இறைவன்பால் ஒப்படைப்பதாகத் தெரிவித்த திருத்தந்தை இந்த நிகழ்வுகளால் காயமடைந்தவர்களுக்கும் அதனால் துயரங்களை அனுபவித்து வருபவர்களுக்குமாகப் பிரார்த்திப்பதாகக் கூறினார்.

## 01 வெசாக் தினத்தையொட்டி...

இக்காலத்தில் மனித வர்க்கம் நல்ல அடிமைமுறை ஓர் உலகளாவிய பிரச்சினைகள் உள்ளது. இப்பிரச்சினையால் உலகப் பெண்களின் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த அநீதிகளை கழுவுவதற்கு இளம் பெண்களும் சிறுமிகளும், கல்வி, சமவேளையில், சம ஊதியம், பாரம்பரியச் சொத்துக்களைப் பெறுதற்குரிய உரிமை வழங்கப்படவேண்டும். பெண்களின் சம மாண்பையும் உரிமைகளை ஊக்குவிப்பது, பலசம உரையாடலில் முக்கியத்துவம் பெறவேண்டும். அத்தோடு பெண்களையும் அவர்களின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம், உடனடியாக பாதுகாக்கப்படவேண்டும். இவ்விடத்தில் தலைமைத்துவப் பணியாற்றும் அனைவருக்கும் சிறப்பான பொறுப்பு உள்ளது. குடும்பங்கள் குழுமங்கள் மற்றும் நிறுவனங்களில் பெண்களின் மாண்பைப் பாதுகாப்பதற்கு எல்லா விதத்திலும் முயற்சிகள் எடுக்குமாறு புத்தமத நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம். அத்தோடு உலகிலும், பணியிடங்களிலும் மனிதருக்கெதிராக இடம்பெறும் அநீதியான அனைத்து பாகுபாடுகளை முற்றிலும் அகற்றப்படுவதற்கு உழைக்குமாறு வலியுறுத்துகின்றது. **திருப்பீட பல்சமய உரையாடல் அவையின் செயலர்.**

## 01 பங்குத்தந்தையர்களுக்கும்...

அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கத்தோலிக்க தேவாலயங்களுக்கும், மக்களுக்கும் வழங்கிய செய்தி. இந்நாட்டின் பாதுகாப்பு பிரிவு இன்னும் தெளிவாய் இல்லை. ஆகவே அனைத்து பங்குத்தந்தையர்களும் மற்ற குருக்களுக்கும் நான் கூறுவது, மக்களை முழுமையாக சோதித்து பாதுகாப்பாக ஆலயத்தினுள் அனுப்பமுடியாவிட்டால் ஞாயிறு திருப்பலியோ அல்லது வார நாள் திருப்பலிகளையோ கொண்டாடவேண்டாம். நாட்டின் பாதுகாப்பு முன்னைய நிலைக்கு திரும்பும் வரை ஆலயங்களில் மக்களை கூட்டி வழிபாடுகளை நிகழ்த்த வேண்டாம். அப்படி நிகழ்த்த வேண்டுமாயின் அமைதியான சூழலில் அனைவரையும் பரிசோதித்து பாதுகாப்பாக நடத்துங்கள். நாட்டின் பாதுகாப்பு திரும்பிய பின் வழமைப்போல திருப்பலிகளை நிகழ்த்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல் நிலைமை வழமைக்கு திரும்பும்வரை திருவிழா கொண்டாட்டங்களோ, ஊர்வலங்களோ ஒழுங்கு செய்ய வேண்டாம். திருமண திருப்பலிகள், ஆலயத்திற்கு எத்தனைபேர் வருவார்கள்? யார் யார் வருவார்கள்? போன்ற தகவல்களைப்பெற்று கட்டுப்பாட்டுடன் நிகழ்த்தவும். இவ்வாறான கட்டுப்பாட்டால் மேலும் உயிர்கள் கொல்லப்படுவதை தவிர்த்துக்கொள்ளலாம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி புலனாய்வு துறையினரால் சொல்லப்பட்ட உடனே எமக்கு சொல்லியிருந்தால் நள்ளிரவு திருப்பலி உட்பட அனைத்து திருவிழா திருப்பலிகளையும் நிறுத்தி எமது மக்களை காப்பாற்றியிருப்போம். இறைவனில் இருந்த அன்பால், எதிர்பார்ப்போடு ஆலயத்திற்கு வந்த மக்கள் படுகொலைக்கு ஆளாகியது வேதனைக்குரிய விடயமாகும். தேவாலயங்களிலும் மற்ற உணவு விடுதிகளிலும் நடத்தப்பட்ட தாக்குதல் கிறிஸ்தவ மக்களை குறிவைத்தே நடத்தப்பட்டது என அறிந்தேன். இதில் கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல இஸ்லாமியர்களும் இறந்துள்ளனர். ஆனால் இந்த அடி கிறிஸ்தவ மதத்திற்குக் கொடுத்த அடியாகும்.

## 03 கன்னி மரியாவின்...

குடும்பங்களை ஒன்றுசேர்த்து ஒற்றுமையாக வாழச் செய்தது. இந்த விலைமதிக்க முடியாத மனிதகுல வழிவழி சொத்தை நாம் இழந்துவிடக்கூடாது. குடும்ப செபத்திலும் குடும்பங்களுக்கான செபத்திலும் தொடர்ந்து செபமாலை செபிக்கும் பழக்கத்திற்கு நாம் திரும்பவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஒன்று சேர்ந்து செபிக்கும் குடும்பம் ஒன்று சேர்ந்து வாழும். நோயுற்றோர், வயதானவர்கள்களுக்குக் கிடைக்கும் ஏராளமான நேரங்களில் செபமாலையே தோழமையுடன் அவர்களுடன் இருக்கிறது.

பிள்ளைகளின் வளர்ச்சி, முன்னேற்றத்தை செபமாலையிடம் ஒப்படைத்துவிடவேண்டும். பிள்ளைகள் பருவ நிறைவு அடைவதில் வளர்ச்சி பெறும்போது அவர்கள் வாழ்க்கையை பெற்றோர்கள் பின்தொடர்வது இதுவரை இல்லாத அளவிற்கு இப்போது கடினமாயிருக்கிறது. மிகவும் முன்னேற்றம் அடைந்த தொழில்நுட்பம், தொலைதொடர்புகள், உலகமயமாக்குதல் நிறைந்த இந்த சமுதாயத்தில் அனைத்தும் அவசரமாக்கப்பட்டுள்ளது. தலைமுறைகளுக்கு இடையே உள்ள கலாச்சார தூரம் மிகவும் அதிகரித்துவிட்டது. பிள்ளைகளுக்காக அதைவிட பிள்ளைகளுடன் சேர்ந்து செபமாலை செபிக்க வேண்டும். இளம் வயதிலிருந்தே குடும்ப செபமாலை செபிக்கும் அனுபவத்தை பயிற்றுவிக்க வேண்டும். செபமாலையை சரியான முறையில் அறிமுகம் செய்து வைத்தால் இளம் வயதினர் இச்செபத்தை அவர்களுடைய சொந்த செபமாக மாற்றிக்கொண்டு அவர்களுடைய வயதுக்கே உரிய கிளர்ச்சி ஆர்வத்துடன் சொமாலை செபித்து பெரியவர்களை வியப்புக்குள்ளாக்குவர். கிறிஸ்தவ சமூகத்தில் செபமாலை மீண்டும் கண்டுபிடிக்கப்பட உண்மையிலேயே மிகவும் தகுதிப் பெற்றது.

**– திருத்தந்தை புனித 2ம் ஜோன்போல் அவர்கள் எழுதிய 16, ஐப்பசி 2002 நாளிட்ட திருத்தூது மடலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.**

## 09 குருக்கள் கிறிஸ்துவின்...

திருஅவையானது, ஆண்டவரது திருப்பணிக்கு தேவையானவர்களை ஆண்டவர் தாமே தேர்ந்து கொள்ளவேண்டும் என அவரிடம் செபிக்காமல் இருந்ததில்லை. இது திருஅவையின் ஒரு கட்டாயக் கடமையுமாகும். அதாவது இறையழைத்தலை ஊக்குவித்து அதனை உய்த்துணர்ந்து கொள்ளவும், தேர்ந்துகொள்ளப்பட்டவர்களின் உருவாக்கத்தில் உறுதுணையாக நிற்கவும் மென்மேலும் உதவிகள் செய்ய முயற்சிகள் எடுப்பதோடு அவர்களின் குருத்துவ துறவற வாழ்விற்காக தொடர்ந்தும் செபிக்கின்றது.

இன்றைய இந்த விசேட நாளில் குருத்துவத்தின் மேன்மையினை சற்று சிந்தித்து பார்ப்போம். அதேவேளை நமது குருத்துவ வாக்குறுதியை புதுப்பித்துக் கொள்வோம். மேலும் இறையழைத்தலை ஊக்குவிக்கவும், இறையழைத்தலைப் பெற்றுக்கொண்டவர்களுக்காக செபிக்கவும், அவர்களின் உருவாக்கத்திற்கு தேவையான வழிகளில் உதவிகளை செய்வதும் நம் ஒவ்வொருவரினதும் கடமையாகக் கொள்வோம். நம் நாட்டு புனிதரான தூய யோசேப்வாஸின் தூய வாழ்வும் நிலையான பணிக்கொள்கையும் இன்றைய இளைஞர் யுவதிகளுக்கு ஒரு முன்மாதிரிகையாக அமையட்டும். எமது பாதுகாவலியாம் தூய கன்னி மரியாளின் பரிந்துரையினால் பல நல்லுள்ளங்கள் நல்லாயனாம் கிறிஸ்துவின் தூய உயிருள்ள விசுவாசத்தின் பிரதிபலிப்பாக மாறிட ஊக்கத்துடன் முன்வருவார்களாக.

## 12 பாலியல் கொடுமையை...

**ஆயர்களுக்கு விதிமுறைகள்**

ஆயர்களுக்கும் அவர்களுக்கு இணையானவர்களுக்கும் உரித்தான விதிமுறைகள் என்ற இரண்டாம் பிரிவில், இவ்விதிமுறைகள் யார், யாரை உள்ளடக்கும் என்பதை விளக்கும்வண்ணம், தற்போது பணியில் ஈடுபட்டுள்ள, மற்றும் பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள கர்தினால்கள், ஆயர்கள், மற்றும் திருத்தந்தையின் பிரதிநிதிகள், அருள்பணியாளர்கள், துறவிகள் ஆகிய அனைவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். பாலியல்கொடுமைகள் குறித்த குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்யும் நேரடியான பணி, விசுவாசக் கோட்பாட்டு பேராயத்தைச் சார்ந்ததெனினும், தவறிழைத்தவர் யார் என்பதைப் பொருத்து, கீழை வழிபாட்டு முறை பேராயம், ஆயர்களின் பேராயம், நற்செய்தி அறிவிப்பு பேராயம், அருள்பணியாளர்கள் பேராயம் மற்றும் துறவியர் பேராயம் ஆகியவை குற்றச்சாட்டுகளைப் பெறலாம் என்று, 7ம் விதிமுறையில் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் பிரிவில் கூறப்பட்டுள்ள 14 விதிமுறைகளில், ஆயர்கள் கடைபிடிக்கவேண்டிய வழிமுறைகள், விசாரணை நடைபெறவேண்டிய வழிமுறைகள், இந்த விவகாரத்தில் தகுந்த திறமை கொண்டோரின் உதவியை நாடுதல், விசாரணை நீடிக்கவேண்டிய கால அளவு, கடைபிடிக்கப்படவேண்டிய பாதுகாப்பு வழிகள், வத்திக்கானுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் என்ற பல்வேறு விதிமுறைகளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கியுள்ளார்.

**2019ம் ஆண்டு ஜுன் 1ம் தேதி முதல்...**

தான் வழங்கியுள்ள விதிமுறைகள், 2019ம் ஆண்டு ஜுன் 1ம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், இந்த விதிமுறைகள், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு, ஒரு சோதனை முயற்சியாக நடைமுறையில் இருக்கும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இம்மடலின் இறுதியில் கூறியுள்ளார்.

## 08 ஆயரின் செய்தி.

நிறுவனங்களிலும் முடிவுகளை தீர்மானிப்பதற்கும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றார். இது பொருள்சார், நீதி மற்றும் மனித வள மேலாண்மை நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களுக்கும் பொருந்துகின்றது. பொறுப்புத்தன்மை உண்மைத்தன்மை இவை ஒரு குருவின் பணியினதும் வாழ்வினதும் பரிசுத்த தன்மையை பரீட்சித்து பார்ப்பவையாக இருக்கின்றது. கடவுளின் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் குரு கிறிஸ்துவின் பரிசுத்த வாழ்வை வாழ்வதற்கு தானே தூய்மையாக்கப்படுகின்றார். பரிசுத்த ஆவியின் வல்லமையால் தனது சொந்த உணர்வுகளை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவிற்கும் அவருடைய திருச்சபைக்குத் தன்னை தியாகம் செய்கின்றார். குருத்துவம் என்பது உறவின் அருளடையாளம், பரிசுத்த வாழ்வு வாழும் குரு, சிறுவர்களையும், இளைஞர்களையும், இளம்பெண்களையும்,பெரியவர்களையும், திருமணமாணவர்களையும், விதவைகளையும், முதியவர்களையும் தனது சொந்த சகோதர சகோதரிகளுடன் இணைப்பதற்காக அழைக்கப்படுகின்றார்கள். இயேசு குறிப்பிடுவது போல இறைவார்த்தையை கேட்டு அதன்படி செயல்படுகிறவர்களே என் தாயும் சகோதரர்களும் ஆவார்கள் (லூக் 8:19-21). நல்லாயன் கூறுகின்றார் **"என் ஆடுகளை அறிந்திருக்கின்றேன், என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன".** இறைவிசுவாசிகளின் இந்த உறவு மேய்ப்பரின் பரிசுத்த தன்மைக்கு ஒரு மெய்யான சாட்சியே. ஒரு மறைமாவட்ட குரு ஏழ்மை என்னும் இறைபுண்ணியத்தை எடுத்துக்கொள்ளாவிட்டாலும் ஏழ்மையின் நல்வாழ்வையும் இறைபேறுகளின் மனப்பான்மைகளையும் செய்வதற்கும் அழைக்கப்படுகின்றார். கிறிஸ்து **"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்" (மத் 5:3)** என்று கூறுகின்றார். பணத்திற்கும், உலக ஆசாபாசங்களுக்கும், கௌரவத்திற்கும், தீங்கு விளைவிக்க கூடிய செயல்பாட்டிற்கு அன்பிற்கெதிராக செயல்படுவது பேறுபலன்களிற்கு எதிரானதாக இருக்கின்றது. நல்லாயனை பின்பற்றுவது ஒரு குருவை பரிசத்தமாக்குகின்றது. இயேசுவின் சீடர்கள் ஆண்டவரே நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மை பின்பற்றியவர்களாயிற்றே, என்று கூற இயேசு இம்மையில் இன்னல்களை எதிர்கொள்வோர் மறுமையில் நூறு மடங்காக நிலைவாழ்வை பெறுவர் என்றார் (மாற்கு 10:28-30). இந்த உறவு தொடர்பை விசுவாசிகள் நல்லாயனின் புனிதத்தன்மையில் காண வேண்டும்.

ஒரு குரு தனது குருத்து அபிஷேகத்தின் போது இறைமக்களுக்கு முன்பாக தனது ஆயனுக்கு கீழ்படிவு என்னும் இறைபுண்ணியத்தை வாக்களிக்கும் போது தனது தந்தைக்கு கீழ்படிந்த கிறிஸ்துவை பின்பற்ற அழைக்கப்படுகின்றார். ஒரு குரு தனது கீழ்படிதலுக்கு விசுவாசமாக இருக்கும் போது இறைவார்த்தை பரப்பப்படுகின்றது (தி.ப 6:7). புனித பவுல் பிலமோனுக்கு எழுதிய மடலில் கூறுவது "என் சொல்லுக்கு நீர் இணங்குவீர் என்னும் நம்பிக்கையோடு இதை எழுதுகின்றேன். நூன் கேட்பதற்கு மேலாகவே நீர் சொல்வீர் என்பது எனக்குத் தெரியும்" (21). தனது பணியை நிறைவேற்ற தந்தையின் விருப்பத்தை குரு கொண்டிருக்க வேண்டும். கடவுளின் விருப்பம் கிறிஸ்துவின் பணியை திருச்சபையில் நிறைவேற்ற வேண்டும் என்பதே. திருச்சபைக்கு கீழ்படிந்து நடப்பதன் வழியாக குரு தூய்மையாக்கப்படுகின்றார். "உங்கள் தந்தை தூய்மையாய் இருப்பது போல நீங்களும் தூய்மையாய் இருங்கள்" (லேவி 19:2, 1பேதுரு 1:15) என்பது நமக்கு தரப்பட்ட பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்கு. நாம் இறைத்தந்தையின் பிள்ளைக-ளாக இருப்பதால் நமக்கு இது பொருந்தும். எமக்கு முன்னால் வாழ்ந்து சென்ற தூய ஜோசப்வாஸ் போல குருக்களும் எம்மிடையே இன்று அரிதாக இல்லை.

## 10 விவிலியப் பகுதி விடைகள்

01. மரியா 02. பர்னபா
03. திருத்தூதர் பேதுரு
04. கி.பி. 64 - கி.பி. 70
05. பிற இனத்து கிறிஸ்தவர்களை
06. யோவான் மாற்கு என்பது திருச்சபை மரபு
07. எசாயா (1:2-3)
08. 'பாவமன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்கு பெறுங்கள்' என்று பறைசாற்றினார்
09. தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் அவர்குள் திருமுழுக்கு பெற்றனர்
10. ஒட்டக முடி (1:6)
11. வெட்டுக்கிளியும்,காட்டுத் தேனும் உண்டுவந்தார் (1:6)
12. 'என்னைவிட வலிமைமிக்க ஒருவர் எனக்குப் பின் வருகிறார்'
13.வானம் பிளவுபடுவதையும் தூய ஆவி புறாவைப்போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார் (1:10)
14. 'என் அன்பார்ந்த மகன் நீயே! உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன் (1:11)
15. நாற்பது நாட்கள்
16. சாத்தானால் (1,13)
17. வானதூதர் (1:13)
18. இறையாட்சி நெருங்கிவந்துவிடது பனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் (1:15)
19. சீமோனும் அவர் சகோதரான அந்திரேயாவும் (1:16)
20. 'என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்' என்று சொல்லி அழைத்தார்
21. மறைநூல் அறிஞரைப் போலன்றி அதிகாரத்தோடு கற்பித்து வந்தார்
22. தீய ஆவி பிடித்திருந்தவரை குணமாக்கினார்
23. சீமோனின் மாமியார்
24. தொழுநோயாளர்
25. போய் உம்மை குருவிடம் ...... காணிக்கையை செலுத்தும் (1:43-44)




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிநுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்




- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |


உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.

பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |




## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்